# வக்கீல்

668

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

668/2-56

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 - MAY 1956
MADRAS


1956
இதழ் 2
(மார்ச்சு—ஏப்ரல்)

## இந்த இதழில்

| | |
|---|---|
| பிரிந்த சகோதரர்கள் | 5 |
| ஸ்டாலின் கொலை | 5 |
| புதிய சட்டங்கள் | 6 |
| பிரஜா உரிமைச் சட்டம் (1955) | 8 |
| பத்திரிகை எழுத்தாளர் சட்டம் (1955) | 10 |
| போட்டிப் பரிசுச் சட்டம் (1955) | 13 |
| அச்சகச் சட்டத்திருத்தம் | 15 |
| வழக்கும் — தீர்ப்பும் | 17 |
| கேள்வியும் — பதிலும் | 19 |
| 1956- சிவில் கோர்ட் கோடை விடுமுறை நாட்கள் | 23 |

விலை அணா 4.

(All Rights Reserved.)




THE VAKIL ✦ TAMIL LAW MAGAZINE

## "வக்கீல்"

**பொது மக்களுக்கான**

**உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை**

குறிப்பு: "வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. மாதப் பத்திரிகையாகப் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. **சம்பத்**, B.A., B.L.,
,, G. **நாகராஜ பத்தர்**, B.A., B.L,
,, V. **தியாகராஜன்**, B.A., B.L.,
,, A. **பார்த்தசாரதி நாயுடு**, B.A., B.L.,
,, S. **சாம்பசிவய்யர்**, B.A., B.L.,
,, T. S. **வெங்கடராமன்**, B.A., B.L.
,, R. **கிருஷ்ணமாச்சாரி**, B.A., B.L.,
,, R. **கோபாலசாமி**, B.A., B.L.,
,, C. R. **வீரராகவன்**, M.A., B.L.,
,, R. **கிருஷ்ணமூர்த்தி**, B.A., B.L.,
,, P. **சுந்தரேசய்யர்**, B.A., B.L.,
,, S. சந்தானம், B.A., B.L.,
,, V. S. **விஜயராகவாச்சாரி**, B.A., B.L.,
**[ஆசிரியர்]**

### "வக்கீல்" சந்தா விபரம்

**தனிப்பிரதி அணா 4. வருட சந்தா ரூ. 3.** ஷை வெளி நாடு இலங்கை உள்பட ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

**சந்தாதார்கள் கவனிக்கவும்:**—"வருட சந்தா" என்பது 12 தொடர்ந்த இதழ்களுக்கான சந்தாவைக் குறிக்கும். **வருடச் சந்தாதார்களுக்கு 12 இதழ்கள் அனுப்பப்படும்.** ஆயுள் **சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.** சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

**மானேஜர், "வக்கீல்" காரியாலயம்,**
**தபால் பெட்டி 26, கும்பகோணம்.**
**(தென் இந்தியா)**

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

### "வக்கீல்"

(விளம்பர விகிதம்)

ஒரு முறை பிரசுரம் செய்ய

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)


வெண்சங்கு நறுமண சீயக்காய்த் தூள்

குணம்
மணம்
சுத்தம்
ஆரோக்கியம்
சிக்கனம்
உடையது.

நறுமண சீயக்காய்த்தூள்
REGD. No. 3817.

உரிமை:
S. பெத்தண்ண நாடார்
.. கீழவாசல்-தஞ்சாவூர்..

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ அன்னகிளி ★

# சோப்

— தயாரிப்பவர் —

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 22 :: தஞ்சாவூர்.

Guarenteed and High class

Lace Silk Sarees

For Variety and Moderate Price

**MARUTHI VILAS**

Ariya: *M. Ramasamy Ayyar*

PURE SILK JAVILI MERCHANT

**AYYAMPET**

TANJORE DISTRICT

V. S. & Sons
SWEETS

இனிப்பும்
மணமும்
நிறைந்த
பெப்பர்மெண்டு

தயாரிப்பவர்கள்:-
தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை.

PROPS:
V.S & SONS
KUMBAKONAM..
ESTD 1925

தரத்தில் உயர்ந்ததும்
சலவைக்கு மிகச் சிறந்ததும்
பெரும்பான்மையோர் விரும்பி
வாங்குவதும்




எப்பொழுதும் வாங்கி
உபயோகியுங்கள்

—: தயாரிப்பு :—

**M. K. சோப் ஒர்க்ஸ்**

கும்பேஸ்வரர் தெற்குவீதி

**கும்பகோணம்**

---

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக் கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள

**பட்டு ஜவுளி தினுசுகள்**

குறைந்த விலையில் கியாரண்டியுடன் கிடைக்குமிடம்.

# ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்

கெருடாலயத் தெரு

கும்பகோணம்

பிராஞ்சு :

20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,

**மதுரை.**

## சிறப்பு ஏடுகள்

| | |
|---|---|
| பேசும் படம் | .. 0-12 |
| திங்கள் | .. 0- 8 |
| காதல் | .. 0- 8 |
| கலைக்கதிர் | .. 0- 8 |
| அமுதசுரபி | .. 0- 8 |
| சினிமா கதிர் | .. 0- 8 |
| நல் வாழ்வு | .. 0- 8 |
| உதய பானு | .. 0- 6 |
| வானொலி | .. 0- 5 |
| குமுதம் | .. 0- 4 |
| உமா | .. 0- 4 |
| வக்கீல் | .. 0- 4 |
| சுதந்தரம் | .. 0- 3 |
| கல்கண்டு | .. 0- 2 |

Sole Agents Madras :

The Madras News Agency

Phone: 86241. Madras - 2.

---

## “வக்கீல்” அறிக்கை

திரு. T. S. வெங்கடராமய்யர் அவர்கள் 14—4—1956 தேதியிலிருந்து ''வக்கில்'' பத்திரிகையின் டிராவலிங் ரெப்ரஸென்டேடிவாக நியமிக்கப் பட்டுள்ளார். ''வக்கில்'' பத்திரிகைக்குச் சந்தா சேர்க்கவும் விளம்பரம் சேகரிக்கவும் ஷ யாருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது.

மானேஜர்
“வக்கீல்”

---

## “வக்கீல்” அறிவிப்பு

அடுத்த ''வக்கீல்'' இதழ் 1956 ஜூன் 1-ம் தேதி பிரசுரமாகும். பிறகு ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரமாகும். நடுவே இந்து வார்சுரிமைச் சட்டம் வந்ததும் அம்முக்கியச் சட்டத்தைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் இரண்டு ''வக்கீல்'' இதழ்களைச் சேர்த்து பிரசுரம் செய்யப்படும். இந்து மைனர் கார்டியன் சட்டம் வந்ததும் அதுவும் அப்படியே ஒரு பிரத்தியேக இதழில் பிரசுரம் செய்யப்படும்.

வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 8 மார்ச்சு — ஏப்ரல் 1956 இதழ் 2

## பிரிந்த சகோதரர்கள்!

நேற்று வரையில் ஒரே குடும்பமாக இருந்த இரு சகோதரர்கள் இன்று பிரிந்து வீட்டால் ஒருவருக்கொருவர் சில நாட்களுக்கு மனக் கசப்புடன் இருப்பது மனித இயல்பே. ஆனால் நாளாக நாளாக, தனியே வசிக்கும் இச்சகோதரர்கள் மறுபடியும் ஒருவரை ஒருவர் நேசிக்கவும் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்கவும் ஆரம்பித்து விடுவார்கள். தனி மனிதர்களுக்கு எப்படியோ, அப்படியேதான் தேசங்களுக்கும். இந்தியாவும் பாகிஸ்தானும் அவ்விதமே. சமீபத்தில் சுதந்தரக் குடியரசாகத் தன்னை அமைத்துக் கொண்ட பாகிஸ்தானுக்கு நல் வாழ்த்துக் கூற ஒவ்வொரு இந்தியரும் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நிஜமான சண்டை ஒரு நாளும் வராது. இந்துக்களிடையே முஸ்லீம்களும், முஸ்லீம்களுக்கிடையே இந்துக்களும் ஆயிரம் ஆண்டுகளாகப் பின்னி வாழ்ந்த பிரதேசங்களைத்தான் நாம் இன்று 'இந்தியா' என்றும் 'பாகிஸ்தான்' என்றும் பிரித்துக் கொண்டிருக்கிறோம். சொத்து சுதந்தரங்கள் விஷயமான சில்லரைச் சண்டைகள் தீர்ந்தவுடன், இவ்விரு நாடுகளுக்குமிடையே வளரக் கூடிய நேச மனப்பான்மையானது வேறு எந்த இரு நாடுகளுக்கு மிருக்காதென்றே சொல்லலாம். ஆனால் இம் மனப்பான்மையை வளர வீட பலரகப்பட்ட அயல் நாட்டுச் சர்க்கார்களும் அயல் நாட்டுப் பத்திரிகைகளும் என்று அவகாசம் கொடுக்கப் போகிறார்களோ, தெரியவில்லை!

## ஸ்டாலின் கொலை!

சென்ற இருபது ஆண்டுகளில் ருஷ்யாவில் இயற்கையாக இறந்த தலைவர்கள் மிகச் சிலரே. அச்சிலரில் மாபெரும் தலைவரான ஸ்டாலினும் ஒருவராவார். இது இப்போதிருக்கும் தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை போலும்! ஸ்டாலினுடைய பூத உடல் போய்விட்டால் என்ன? அவருடைய புகழுடலை இன்றையத் தலைவர்கள் பயப்படாமல் சித்திரவதை செய்துவருவதைப் பார்க்கிறோம். ஆனால் ஸ்டாலின் இறந்து மூன்று வருடங்கள் கடந்த பிறகுதான் இவர்களுக்கு ஸ்டாலினிடம் இருந்த பயம் தெளிந்தது போலும்!

600 008

# புதிய சட்டங்கள்

## சுருக்கியும் - வரிசையாகவும்

### 1955-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண் அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

### 37. உண்டியல் சட்டத் திருத்தம்

The Negotiable Instruments Amendment Act 1955 (15-10-1955) செக், உண்டியல், அன்டிமாண்ட் அல்லது பிராமிசரி நோட்டுகள், பில் ஆப் எக்ஸ்சேஞ்ச் ஆகிய மாற்றக் கூடிய தஸ்தவேஜுகள் (Negotiable Instruments) சம்பந்தமான 1881-ம் வருடத்திய 26-வது மத்தியச் சட்டத்தில் இரண்டு சிறிய திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. 'பாங்கர்' என்பதற்கு அர்த்தம் சொல்லப்பட்டிருக்கும் செக்ஷன் 3ல் ஒரு திருத்தம் செய்யப்பட் டிருக்கிறது. இத்திருத்தப்படி 'பாங்கர்' என்றால் பாங்குத் தொழில் நடத்தும் நபர்களையும் போஸ்டாபீசு சேவிங்ஸ் பாங்கையும் குறிக்கும் என்று இப்போது அர்த்தம் சொல்லப்பட் டிருக்கிறது. 'செக்' மூலம் போஸ்டாபீசிலிருந்து பணம் வாங்க வசதியளிக்கவே இத்திருத்தம் செய்யப்பட் டிருக்கிறது. செக்ஷன் 25ல் பாங்கு விடுமுறை நாட்கள் எவை என்று சொல்லப்படும் ஷரத்தும் திருத்தப்பட்டிருக்கிறது. இத்திருத்தப்படி ஞாயிற்றுக்கிழமைகளும் சர்க்காரால் கெஜட் அறிக்கை மூலம் குறிப்பிடப்படும் நாட்களுமே பொது விடுமுறை நாட்களாகும்.

### 38. அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம் (3)

Appropriation (No. 3) Act 1955. (15-10-1955) 1955-56 நிதி வருடத்தில் இந்தியப் பொது நிதியிலிருந்து இச்சட்டத்தில் கண்டிருக்கும் செலவினங்களுக்காக ரூ. 1,69,84,000. செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதியளிக்கும் சட்டம்.

### 39. மதுச் சரக்குகள் - வெளி ராஜ்ய வியாபார - கட்டுப்பாடுச் சட்டம்

Spirituous Preparations (Inter-state Trade and commerce) control Act, 1955. (15-10-1955) மது விலக்குச் சட்டம் அமுலில் உள்ள ராஜ்யங்களில் ஆல்கஹால், ஒயின் போன்ற மதுச்சரக்குகள் கலந்த மருந்து வகையறுக்களை வேறு ராஜ்யங்களிலிருந்து உள்ளே கொண்டு வரவும் அனுப்பவும் இச்சட்டப்படி லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். இது சம்பந்தமான கட்டுப்பாடு விதிகளும், தண்டனைகளும் இச்சட்ட ஷரத்துக்களில் குறிப்பிடப்பட் டிருக்கின்றன.

### 40. ஆடிடர் சட்டத் திருத்தம்

The Chartered Accountants Amendment Act 1955. (21-10-1955) வெளி நாடுகளில் எந்த எந்தப் பரீட்சைகளில் தேறி எந்த எந்தப் பயிற்சிகளை முடித்தவர்களைத்தான் இந்தியாவில் ஆடிடர் (சார்ட்டேட் அகவுண்டண்டு) களாக அங்கீகரிக்கப்படும் என்று சொல்ல இச்சட்டத்தால் அமைக்கப்பட்ட கவுன்சிலுக்கு மட்டில்தான் அதிகாரம் இருந்தது. இத்திருத்தப்படி இனி இந்த அதிகாரம் மத்திய சர்க்காருக்கும் உண்டு, கவுன்சிலுக்கும் உண்டு. இந்தியாவில் ஸ்திரவாசமில்லாதவர்கள் ஆடிடர்களாக வரவேண்டுமானால் மேலே கண்ட யோக்கியதாம்சங்களைத் தவிர வேறு நிபந்தனைகளையும் ஏற்படுத்த மத்திய சர்க்காருக்கும் கவுன்சிலுக்கும் இத்திருத்தத்தால் அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது.

### 41. பாங்குச் சிப்பந்திகள் தொழில் தகராறு தீர்ப்புச் சட்டம்

Industrial Disputes - Banking companies - Decision Act. வெகு நாட்களாக பாங்குச் சிப்பந்திகளுக்கும் பாங்கு நிர்வாகங்களுக்கு மிடையே நடந்து வந்த தொழில் தகராறு சம்பந்தமாக முடிவான தீர்ப்பை நிர்ணயம் செய்யும் சட்டம். முதலில் 1952ல் நியமிக்கப்பட்ட பம்பாய் அகில இந்திய தொழில் டிரிபுனலால் அளிக்கப்பட்ட மத்தியஸ்தத் தீர்ப்பின் பேரில் தொழில் அப்பீல் கோர்ட்டாரால் 28-4-1954ல் தீர்ப்பு அளிக்கப்பட்டது. இத்தீர்ப்பைப்பற்றி புனராலோசனை செய்ய மத்தியச் சர்க்காரால் 25-2-1955ல் ஒரு கமிஷன் (Bank Award commission) நியமிக்கப்பட்டது. அப்பீல்த் தீர்ப்பில் இக்கமிஷன் சில மாறுதல்கள் செய்தது. கமிஷனால் மாறுதல் செய்யப்பட்ட அப்பீல் தீர்ப்பை இச்சட்டம் அங்கீகாரம் செய்கின்றது. இத்தீர்ப்பு 31-3-1959 வரையில்தான் அமுலில் இருக்கும். இத்தீர்ப்பில் ஏதாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் அவற்றை தொழில் அப்பீல் கோர்ட்டுக்கு அனுப்பி சந்தேகங்களைத் தீர்த்துவிட மத்திய சர்க்காருக்கு இச்சட்டத்தால் அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது.

### 42. போட்டிப் பரிசுச் சட்டம் (1955)

The prize competitions Act 1955. (22-10-1955) குருக்கெழுத்துப் போட்டி

முதலிய போட்டிகளைக் கட்டுப் படுத்தும் சட்டம். இச்சட்டமும் விதிகளும் இந்த இதழில் விவரமாக விளக்கப்பட் டிருக் கின்றன.

**44. சவுக்கடி (கசையடி) தண்டனை ரத்துச் சட்டம்**

Abolition of whipping Act 1955. (19-12-1955) சிலவகைக் குற்றங்களுக்கு, மற்றவகை தண்டனைகளுக்குப் பதிலாகவோ, அல்லது மற்றவகை தண்டனைகளுக்கு அதிகப் படியாகவோ, குற்றவாளிக்குச் சவுக்கடி அல்லது கசையடி கொடுக்கும்படி தண்டனை விதிக்கக் கோர்ட்டுகளுக்கு அதிகாரம் கொடுத்த 1909-ம் வருடத்திய 4-வது மத்தியச் சட்ட மாகிய கசையடிச் சட்டம் இச்சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது. இனி கசையடி தண்டனை கிடையாது.

**45. வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர் சட்டம்**

The working Journalists (conditions of service) and Miscellaneous provisions Act 1955. (20-12-1955) இச்சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப்பட் டிருக்கிறது.

**46. அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம் (4)**

Appropriation (No. 4) Act 1955. (20-12-1955) 1955-56 நிதி வருடத்தில் இன்னும் ரூ. 15, 25, 12,000 செலவு செய்ய மத்திய அரசாங்கத்திற்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

**47. அரசாங்கச் செலவு அனுமதிச் சட்டம் (5)**

Appropriation (No. 5) Act 1955. (20-12-1955) 31-3-1951 உடன் முடிவடைந்த நிதி வருடத்தில் மத்திய சர்க்காரால் அதிகப்படியாகச் செலவு செய்யப்பட்ட ரூ. 4,31,91,000க்கு அனுமதியளிக்கும் சட்டம்.

**48. இந்திய தீர்வைப் பட்டியல் இரண்டாவது திருத்தச் சட்டம்**

Indian Tariff Second Amendment Act 1955. (24-12-1955)

**49. ஷை 3 வது திருத்தச் சட்டம்.**

**50. லஞ்சத்தடைச் சட்டத் திருத்தம்**

Prevention of Corruption Amendment Act 1955. (24-12-1955) லஞ்சம் வாங்கும் சர்க்கார் ஊழியர்களைப் பற்றிய வழக்குக்களை விசாரிக்கவும் கடுமையான தண்டனை விதிக்கவும் 1947ல் ஒரு தனிச் சட்டம் இயற்றப் பட்டது. மாஜிஸ்ட்டிரேட்டினுடைய உத்தரவு இல்லாமலே போலீசாரே லஞ்சம் வாங்கியதாக குற்றம் சாட்டப்படும் சர்க்கார் ஊழியர்களை அரெஸ்ட் செய்ய இச்சட்டம் அனுமதித்தது. ஆனால் சர்க்கார் ஊழியருக்கு லஞ்சம் கொடுத்தவர்களையும் லஞ்சம் வாங்கிக் கொடுத்தவர்களையும் போலீசார் அவ்விதம் அரெஸ்டு செய்ய முடியாமல் இருந்தது. இத் திருத்தச் சட்டத்தால் அவ்வித நபர்களையும் இனி மாஜிஸ்ட்ரேட்டின் உத்தரவு இல்லாமலே போலீசாரே அரெஸ்டு செய்யலாமென இச் சட்ட ஷரத்துக்கள் இப்போது திருத்தப்பட் டிருக்கின்றன.

**51. ரயில்வேப் பண்டங்கள் இருட்டுத் தடைச் சட்டம்**

Railway Stores-Unlawful possession-Act 1955. ரயில்வே வேலைகளுக்கு உபயோகிக்கப்படும் ரயில்வேக்குச் சொந்தமான எவ்விதப் பண்டங்களையும் ஒருவர் வைத்திருந்து, அப்பண்டங்கள் தமக்கு எப்படிக் கிடைத்தன என்று அவர் திருப்திகரமாக ருசுப்பிக்க முடியாமல் போனால், அதுவே ஒரு குற்றமாகும். ஐந்து வருடம்வரை சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். அதாவது களவுபோய் விட்டதாகவோ அல்லது சட்டவிரோதமாக அபகரிக்கப்பட்டுவிட்டதாகவோ சந்தேகப் படும் ரயில்வேப் பண்டங்கள் எவருடைய வசத்தில் கண்டுபிடிக்கப்பட்டாலும் அவருக்கு மேற்கண்டபடி தண்டனை உண்டு. அப் பண்டங்கள் தம்மிடம் எப்படி வந்தது என்று அவர் திருப்திகரமாக ருசுப்பித்தாலொழிய அவர் தப்பமுடியாது.

**54. இன்ஷ்யூரஸ் சட்டத்திருத்தம்**

Insurance (Second Amendment) Act 1955. (29-12-1955) இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி பணத்தைக் கையாடியவர்களுடைய சொந்த சொத்துக்களைப் பராதீனம் செய்யாமல் தடைசெய்யவும், அவர்கள் கையாடிய தொகைகளைத் திருப்பிக் கொடுப்பதற்குமான ஷரத்துக்கள் இன்ஸ்யூரன்ஸ் சட்டத்தில் சேர்க்கப்பட் டிருக்கின்றன.

**55. அச்சகப் புத்தகப் பதிவுச் சட்டத் திருத்தம்**

Press and Registration of Books (Amendment) Act 1955. (29-12-1955) இச்சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப் பட்டிருக்கிறது.

**57. பிரஜா உரிமைச் சட்டம்**

Citizenship Act 1955. (30-12-1955) இச்சட்டம் இந்த இதழில் விவரமாக விளக்கப் பட்டுள்ளது.

# பிரஜா உரிமைச் சட்டம் (1955)

*[1955-ம் வருடத்திய 57-வது மத்தியச் சட்டம். இந்தியப் பார்லிமெண்டால் இயற்றப்பட்ட இச்சட்டம் 30-12-1955ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று அத்தேதி முதல் அமுலுக்கு வந்தது.]*

## முகவுரை

இந்திய அரசியல் அமைப்புச் சட்டமானது 26-1-1950ல் அமுலுக்கு வந்தது. அத்தேதியில் 'இந்தியப் பிரஜை'கள் யார் யார் என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் இரண்டாவது பாகத்தில் 5 முதல் 11 வரையில் உள்ள ஷரத்துக்களில் விளக்கப்பட்டிருக்கின்றது. ஒருவர் இந்தியாவிலே பிறந்திருந்தாலும் சரி; அல்லது அவருடைய தாயோ, தகப்பனோ இந்தியாவில் பிறந்தவராக இருந்தாலும் சரி; அல்லது 26-1-1950 க்கு முன்பு ஒருவர் சாதாரணமாக இந்தியாவிலேயே வசித்துவந்தாலும் சரி இவர்கள் இந்தியாவையே தங்களுடைய இருப்பிடமாக (Domicile) வைத்துக்கொண்டிருந்தால் - இவர்கள் எல்லாம் இந்தியப் பிரஜைகள் என்று அரசியல் அமைப்புச் சட்டத்தால் பிரகடனம் செய்யப்பட்டது. பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்களும் சில நிபந்தனைகளைப் பூர்த்தி செய்திருந்தால் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்பட்டனர். இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்தபோது அயல்நாடுகளில் வசித்த இந்தியர்களும் தங்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ள அரசியல் அமைப்புபுச் சட்டத்தின் ஆர்டிகிள் 8 என்ற ஷரத்தால் வசதிகள் அளிக்கப்பட்டன. ஒரு இந்தியப் பிரஜையானவர், தாமாக அயல் நாட்டின் பிரஜா உரிமையைப் பெற்றுக்கொண்டால், அவர் இந்தியப் பிரஜா உரிமையை இழந்துவிடுவார் என்றும் ஆர்டிகிள் 9 என்ற ஷரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்டிருப்பதெல்லாம் 26-1-1950 தேதியில் யார் இந்தியப் பிரஜைகள் என்பதைப் பற்றியே, அத்தேதிக்குப் பிறகு பிறந்தவர்களுக்கும் சரி, அயல் நாட்டினருக்கும் சரி இந்தியப் பிரஜா உரிமை அளிப்பது சம்பந்தமாகவும், பிரஜா உரிமையை ரத்து செய்யும் சம்பந்தமாகவும் சட்டம் இயற்ற இந்திய பார்லிமெண்டுசபைக்கு அரசியல் அமைப்புச்சட்டத்தின் ஆர்டிகிள் 11 என்ற ஷரத்தானது அதிகாரம் கொடுத்திருக்கின்றது. இந்த அதிகாரத்தை உபயோகித்து இப்போது நமது பார்லிமெண்ட் சபையால் இப் பிரஜா உரிமைச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

ஒரு நாட்டின் பிரஜா உரிமை என்பது ஒரு மிக முக்கிய உரிமையாதலால், அயல் நாட்டில் வசிக்கும் இந்தியர்களும் அயல் நாடுகளின் தொடர்பு உள்ளவர்களும் இச் சட்ட ஷரத்துக்களை நன்கு அறிந்து கொள்ளுவது மிக அவசியமாகும்.

**இந்தியப் பிரஜா உரிமையை அடைய ஐந்து வழிகள் உண்டு.**

அவையாவன:—(1) பிறப்பினால் பிரஜா உரிமை.— Citizenship by birth. (2) வம்சத்தினால் பிரஜா உரிமை. Citizenship by descent. (3) பதிவு செய்து கொள்ளுவதால் பிரஜா உரிமை. Citizenship by registration. (4) வேறு நாட்டின் பிரஜையானவர் தம்மை இந்தியப் பிரஜையாகச்செய்துகொள்ளுவது — Citizenship by naturalisation. (5) இனி இந்தியாவுடன் இணைக்கப்படும் பிரதேசங்களில் இருப்பவர்களுக்கு இந்திய பிரஜா உரிமை அளிப்பது—Citizenship by incorporation of territory. இந்தப் பிரஜா உரிமை அடைவதற்கான மேலே கண்ட ஐந்து வகைகளும் இச்சட்டத்தின் செக்ஷன் 3-முதல் 7-வரையில் விளக்கப் பட்டிருக்கின்றன. சுருக்கமாக அவை பின்வருமாறு:-

**26—1—1950 அன்றோ அத்தேதிக்குப் பிறகோ இந்தியாவில் பிறந்தவர்கள் இந்தியப் பிரஜைகளாவார்கள். (செக்ஷன் 3.)**

ஆனால் இந்தியப் பிரஜை அல்லாமலும் அயல் நாட்டுத் தூதர் என்ற அந்தஸ்து சலுகைகளுடனும் இருக்கும் தகப்பனுக்குப் பிறக்கும் குழந்தைகள் இந்தியாவில் பிறந்தாலும் அக் குழந்தைகளுக்கு இந்தியப் பிரஜா உரிமை வராது. எந்த இடமாவது பகைவருடைய ஆக்கிரமப்பில் இருந்து அச்சமயத்தில் பகைமையுள்ள அயல்நாட்டுத் தகப்பனுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இந்தியப் பிரஜா உரிமை கிடையாது.

**வம்ச வழியால் இந்தியப் பிரஜை. (செக்ஷன் 4.)**

இந்தியப் பிரஜா உரிமை உள்ள தகப்பனுக்கு 26-1-1950 தேதியிலோ அதற்குப் பிறகோ அயல்நாட்டில் பிறக்கும் பிறக்கும் குழந்தைகளும் இந்தியப் பிரஜையாவார்கள். அயல் நாட்டில் பிறந்தாலும், தகப்பன் இந்தியப் பிரஜை என்ற காரணத்தினால் இந்தியப் பிரஜா

உரிமை பெற்ற ஒரு ஆண் நபருக்கு அயல் நாட்டில் குழந்தைகள் பிறந்தால், குழந்தை பிறந்த ஒரு வருடத்திற்குள்ளோ (அல்லது இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதிக்கு ஒரு வருடத்திற்குள்ளோ எது பிந்தி இருக்கிறதோ அத்தேதிக்குள்) குழந்தை பிறந்த விஷயத்தை அந்நாட்டிலுள்ள இந்திய தூதராலயத்தில் (Indian Consulate') பதிவு செய்து கொள்ள வேண்டும், அல்லது அக்குழந்தையின் தகப்பன் குழந்தை பிறக்கும்போது இந்திய அரசாங்க ஊழியராக இருக்கவேண்டும். அப்படி இருந்தால்தான் அக்குழந்தைகள் இந்தியப் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள். பதிவு செய்து கொள்ள வேண்டிய கெடுவை நீடிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வந்த தேதியாகிய 26-1-1950 க்கு முன் அயல் நாட்டில் பிறந்த பலர் இந்தியப் பிரஜையானார்கள். எப்படி என்றால் - அயல்நாட்டில் பிறந்தவருடைய தாயோ தகப்பனோ இந்தியாவில் பிறந்தவராக இருந்தால் அயல்நாட்டில் பிறந்தவர்களும் இந்தியப் பிரஜைகளென பிரகடனம் செய்யப்பட்டது. இப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தால் இந்தியப் பிரஜையானவர்களுக்கு அயல்நாட்டிலேயே குழந்தைகள் பிறந்தால் அக்குழந்தைகள் பிறந்த விஷயத்தை மேற்கண்டபடி பதிவு செய்தாலொழிய அக்குழந்தைகளுக்கு இந்தியப் பிரஜா உரிமை கிடையாதென்பதை கவனிக்கவும்.

### பதிவு செய்துகொள்ளுவதால் இந்தியப் பிரஜா உரிமை. [செக்ஷன் 5]

இந்திய அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்களினாலோ இச்சட்டத்தின் வேறு ஷரத்துக்களினாலோ இந்திய பிரஜா உரிமை கொடுக்கப்படாத கீழே கண்டவர்கள் மனுச்செய்து கொள்வதின் மூலம் இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்துகொள்ளலாம். அவர்களாவன:- (1) ஆதியில் இந்திய சம்பந்தமுள்ளவர்கள் மனுத்தேதிக்கு முன் ஆறுமாதங்கள் இந்தியாவிலேயே சாதாரணமாக வசித்து வந்தாலும் (2) ஆதியில் இந்திய சம்பந்தமுள்ளவர்கள் இந்தியா பாகிஸ்தான் இந் நாடுகளுக்கு வெளியே சாதாரணமாக வசித்து வந்தாலும் (3) இந்தியப் பிரஜைகளை மணம் செய்து கொண்டிருக்கும் ஸ்திரீகளும் (4) இந்தியப் பிரஜைகளுடைய மைனர் குழந்தைகளும் (5) 'காமன்வெல்த்' நாடுகளெனப்படும், இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலண்டு, தென் ஆப்ரிக்கா, பாகிஸ்தான், சிலோன், ரோடீஷியா, அயர்லாந்து இந் நாட்டுப் பிரஜைகளும்— மேற்கண்டபடி இந்திய அதிகாரிக்கு மனுச்செய்து தங்களை இந்தியப் பிரஜைகளாகப் பதிவு செய்து கொள்ளலாம்.

### வேறு அயல்நாடுகளின் பிரஜைகளும் இந்தியப் பிரஜையாக மாற்றிக் கொள்ளலாம்.

மேலே கண்ட நாடுகளைத் தவிர வேறு அயல் நாடுகளைச் சேர்ந்த பிரஜைகளும் சில நிபந்தனைகளுக்குட்பட்டு, அந்நாட்டின் பிரஜா உரிமைகளைத் துறந்துவிட்டுத் தங்களை இந்தியப் பிரஜைகளாக மாற்றிக் கொள்ளலாம். (செக்ஷன் 6.)

### இந்தியாவுடன் இணைக்கப்படும் நாடுகளில் உள்ளவர்கள்.

இப்போது இருக்கும் இந்தியாவின் பாகமாக வேறு பிரதேசங்கள் இணைக்கப்பட்டால் அப் பிரதேசத்தில் இருப்பவர்களுக்கு இந்தியப் பிரஜா உரிமை அளிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

### இந்தியப் பிரஜா உரிமை இழக்கப்படும் சந்தர்ப்பங்கள்.

இந்தியப் பிரஜை எவரும் வேறு தேசத்தின் பிரஜையாகவும் இருந்து தமக்கு இந்தியப் பிரஜா உரிமை வேண்டாமென்று விதிகளின்படி உறுதிமொழி செய்வதன் பேரில் அவர் இந்தியப் பிரஜா உரிமையை இழந்துவிடுவார் (செக்ஷன் 8).

மேலும் 26-1-1950-க்குப் பிறகு இச்சட்டத் தேதிக்கு முன்பு இந்தியப் பிரஜை ஒருவர், தாமாக வேறுநாட்டின் பிரஜையாகி இருந்தால் அவர் இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 30-12-1955-ல் இந்தியப் பிரஜை என்ற அந்தஸ்தை இழந்தவராவார். இச்சட்டம் வந்தபிறகு இந்தியப் பிரஜை ஒருவர் தாமாக வேறு நாட்டின் பிரஜையானாலும் அத்தேதிமுதல் அவர் இந்தியப் பிரஜா உரிமைகளை இழப்பார். (செக்ஷன் 9.)

சிலவகை இந்தியப் பிரஜைகளுடைய பிரஜா உரிமைகளை ரத்து செய்யவும் மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதாவது அரசியல் அமைப்புச் சட்டப்படி ஐந்து வருடம் இந்தியாவில் வசித்து வந்ததால் மட்டில் இந்தியப் பிரஜையானவர்கள்; அயல் நாட்டுப் பிரஜைகளாக இருந்து இந்தியப் பிரஜைகளானவர்கள்; இந்தியப் பிரஜைகளாகப்பதிவு செய்து கொண்டவர்கள். இவர்களுடைய பிரஜா உரிமைகளை (சில விதிவிலக்குகளுக்குட்பட்டு) ரத்து செய்ய மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்திய அரசியல் அமைப்புக்கு தம்முடைய செய்கைகளாலோ, பேச்சினாலோ துரோகம் செய்யும்

இந்தியப் பிரஜைகளுடைய பிரஜா உரிமைகளை யும் யுத்தகாலத்தில் பகைவருடன் தொடர்பு வைத்துக் கொள்ளும் இந்தியப் பிரஜைகளு டைய பிரஜா உரிமைகளையும், இன்னும் சில குறிப்பிட்ட சந்தர்ப்பங்களிலும் பிரஜா உரி மையை ரத்துச் செய்ய மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது. (செக் ஷன் 10.)

**காமன் வெல்த் பிரஜை (Common wealth citizenship)**

முன்பு குறிப்பிடப்பட்டிருக்கும் காமன் வெல்த் நாடுகளின் (இங்கிலாந்து முதலியவை) பிரஜைகளுக்கு இந்தியாவில் 'காமன் வெல்த் பிரஜை' என்ற அந்தஸ்து உண்டு. இவர்க ளுக்கும் இந்தியப் பிரஜைகளுக்குள்ள உரிமை களை அளிக்க மத்தியச் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் தங்கள் நாட்டிலும் இந்தியப் பிரஜைகளுக்கு இதே வித உரிமை அளிக்கும் நாடுகளின் பிரஜைகளுக்குத்தான் மேலே கண்ட சலுகைகள் காட்டப்படும். (செக்ஷன் 11.)

**இந்தியப் பிரஜையா என்ற சந்தேகம் ஏற்பட்டால்.**

இவ்விதச் சந்தேகம் ஏற்பட்டால் இதுவிஷய மாக 'சர்ட்டிபிகேட்' கொடுக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் உண்டு. (செக்ஷன் 13)

பதிவு அதிகாரிகளின் உத்தரவுகளின் பேரில் 30-நாட்களுக்குள் மத்திய சர்க்காருக்கு அப்பீல் உண்டு. இச்சட்டத்தை அமுல் நடத்த மத்திய சர்க்கார் விதிகள் இயற்றலாம்.

# வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர் சட்டம் (1955.)

இது இந்திய பார்லிமெண்டால் இயற்றப் பட்ட 1955-ம் வருடத்திய 45-வது மத்தியச் சட்டம். இச் சட்டம் 20—12—1955-ல் ஜனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று 21-12-1955 தேதியுள்ள இந்தியா கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிறது. இச் சட்டத் திற்கு ஆங்கிலப் பெயர்:— The Working Journalists (conditions of Service) and Miscellaneous Provisions Act 1955.)

**வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர் (Working Journalists) என்பது யாரைக் குறிக்கும்.**

பத்திரிகைக்கு எழுதுவதையே தம்முடைய பிரதானத் தொழிலாக வைத்துக்கொண் டிருக்கும் ஒருவரை ஒரு பத்திரிகை ஸ்தாபனத் திலேயோ (Newspaper Establishment) அல்லது அப்பத்திரிகை ஸ்தாபன சம்பந்த மாகவோ வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட் டிருந்தால், அவருக்கு இச் சட்டத்தில் "வேலை யில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர்" (Working Journalist) என்று பெயர். ஆசிரியர், தலையங்கம் எழுதுபவர், செய்தி ஆசிரியர், உதவி ஆசிரியர், கட்டுரை எழுதுபவர், காபி டேஸ்டர், ரிபோர்ட்டர், நிருபர். படம் வரைபவர், செய்தி போட்டோ எடுப்ப வர், ப்ரூப் ரீடர் இவர்கள் எல்லாம் இதில் சேர்ந்தவர்களே. ஆனால் முக்கியமாக நிர்வாக சம்பந்தமாக் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட் டிருப்பவர்களும், மேன் பார்வையாளர்களும் இதில் சேர்ந்தவர்களாக மாட்டார்கள்.

**வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர்களுக்கு தொழில் தகராறு சட்டம் விஸ்தரிக்கப்பட் டிருக்கிறது.**

தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கு மிடையே தொழில் தகராறுகள் ஏற்பட்டால், அவற்றை சமரசமாகவோ மத்தியஸ்த கோர்ட்டுகள் மூலமாகவோ தீர்த்து விடுவதற் காக இயற்றப்பட் டிருக்கும் 1947-ம் வரு டத்திய 14-வது மத்தியச்சட்டமாகிய தொழில் தகராறு சட்டம் (Industrial Disputes Act 1947) தொழிலாளர்களுக்கு எப்படியோ அப்படியே இப் பத்திரிகை எழுத்தாளர் களுக்கும் உண்டு. ஆனால் ஒரு விஷயத்தில் மட்டில் மாறுதலுடன் அச்சட்டம் இவர் களுக்குப் பொருந்தும். அதாவது தொழில் தகராறு சட்டத்தின் செக்ஷன் 25 F என்ற ஷரத்துப்படி முதலாளியானவர் ஆள் குறைப்பு (Retrenchment) செய்யும் போது, தொழி லாளருக்கு முன்னதாகவே நோட்டீஸ் கொடுக்கவேண்டுமென்று இருப்பதில் ஆசிரி யரை வேலையை விட்டு நீக்க ஆறு மாத நோட் டீசும், மற்ற பத்திரிகை எழுததாளர் களைக் குறைக்க மூன்று மாத நோட்டீசும் கொடுக்க வேண்டுமென்ற ஒரே மாறுதலும் தவிர இவர்களுக்கு தொழில் தகராறு சட் டத்தின் எல்லா ஷரத்துக்களும் உண்டு.

***14—7—1954 க்கும் 12—3—1955 க்கும் இடையே வேலையைவிட்டு நீக்கப் பட்டவர்கள்***

இவர்களுக்கு ஒரு மாத முன் நோட்டீஸ் கொடுக்கப்படாமலிருந்தால், ஒரு மாதச்

சம்பளம் கொடுக்கப்படவேண்டும். தவிர வேலையிலிருந்து நீக்கப்பட்டவர்கள் எத்தனை வருடம் வேலை செய்திருக்கின்றனரோ அதற்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 15 நாட்களின் சராசரிச் சம்பளம் எவ்வளவோ அத்தொகையும் சேர்த்து இவர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

**வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர்கள் வேலையை விடும்போது அவர்களுக்கு 'கிராட்யூடி' (Gratuity) அல்லது நன்கொடை கட்டாயமாகக் கொடுக்கப்படவேண்டும். இறந்தாலும் வார்சுகளுக்கு இத்தொகை கொடுக்கப் பட வேண்டும். (செக்ஷன் 5)**

ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தில், இச்சட்டத்திற்கு முன்போ, பிறகோ, ஒரு பத்திரிகை எழுத்தாளர் குறைந்தது மூன்று வருடங்களாவது தொடர்ந்து வேலையில் அமர்ந்திருந்து, அவரை எக்காரணத்தைக் கொண்டும் பத்திரிகை முதலாளியானவர் வேலையை விட்டு நீக்கினாலும் சரி; அல்லது, வயதான காரணத்தினால் அவர் 'ரிடையர்' ஆனாலும் சரி; அல்லது அந்தப் பத்திரிகை ஸ்தாபனத்திலிருந்து பத்திரிகை எழுத்தாளர் தாமாகவே ராஜினாமா செய்தாலும் சரி; இவர்களுக்கு 'கிராட்யூடி' அல்லது நன்கொடை கொடுக்கப்படவேண்டும். இவர்கள் வேலை செய்த ஒவ்வொரு வருடத்திற்கும் 15 நாட்களின் சராசரிச் சம்பளம் எவ்வளவோ அத்தொகை இவர்களுக்குக் 'கிராட்யூடியாக'க் கொடுக்கப்பட வேண்டும். இவர்களுக்குத் தொழில் தகராறு சட்டப்படி கிடைக்கக் கூடிய அனுகூலங்களுக்குக் குந்தகமின்றி இத்தொகையை அடைய இவர்களுக்கு உரிமை உண்டு. மேலே கண்டபடி மூன்று வருடங்களுக்குக் குறையாமல் வேலை செய்த ஒரு பத்திரிகை எழுத்தாளர் வேலையிலிருக்கும் போதே இறந்துவிட்டாலும், மேலே கண்டபடி கணக்குச் செய்யப்பட்ட 'கிராட்யூடி'த் தொகையானது இவர்களுடைய வார்சுகளுக்குக்கொடுக்கப்பட வேண்டும். (ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு ஒரு தண்டனையாக வேலையிலிருந்து நீக்கப்படும் பத்திரிகை எழுத்தாளர்களுக்கு மட்டில் 'கிராட்யூடி' கிடையாது.)

**ஆறு டத[illegible]கை எழுத்தாளர்களுக்கு அதிகப்படாம[illegible] வேலை செய்யும் பத்திரிகை ஸ்தாபனங்கள் இச் சட்[illegible] உள்ள காலத்திற்கு கு[illegible]டியூடி கொடுத்தால் போதும்.**

இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு 12 மாதங்களுக்குள் பத்திரிகை எழுத்தாளர்கள் 6 நபர்களுக்கு மேற்படாமல் அமர்த்திக் கொள்ளப்பட்ட பத்திரிகை ஸ்தாபனங்கள், இச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு உள்ள காலத்திற்கு மட்டில் அடியில் கண்டிபடி 'கிராடியூடி' தொகையைக் கணக்குச் செய்து கொடுத்தால் போதும். இச் சட்டம் வருவதற்கு முன்பு ஒரு பத்திரிகை எழுத்தாளர் 5 வருடங்களுக்குக் குறைவாகவே வேலை செய்திருந்தால் அவருக்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 3 நாட்களின் சராசரிச் சம்பளமும்; 5 வருடங்களுக்குமேல் 10 வருடங்களுக்கு அதிகப்படாமல் வேலை செய்தவர்களுக்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 5 நாட்களின் சராசரிச் சம்பளமும்; 10 வருடங்களுக்கு மேற்பட்டு வேலை செய்தவர்களுக்கு ஒவ்வொரு வருடத்திற்கும் 7 நாட்களின் சராசரிச் சம்பளமும் 'கிராட்யூடியாக'க் கொடுக்கப் பட்டால் போதும். இச் சலுகை, இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்பு இச் சிறிய ஸ்தாபனங்களில் வேலை செய்தவர்களுக்கு அக்காலத்திற்காகக் கணக்குச் செய்யப்பட வேண்டிய கிராட்யூடியைப் பற்றிய மட்டில்தான் உண்டு.

## வேலை நேரம்

இச் சட்டத்தை அனுசரித்து ஏற்படும் விதிகளுக்குட்பட்டு — ஒரு பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலை செய்யும் எந்தப் பத்திரிகை எழுத்தாளரையும், தொடர்ந்த 4 வாரங்களில் மொத்தம் 144 மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யும் படி கேட்கவும் கூடாது, அனுமதிக்கவும் கூடாது. சாப்பாட்டு நேரத்தை நீக்கி மேற்கண்ட மணி நேரம் கணக்குச் செய்யப்பட வேண்டும். மேலும் இவர்கள் வேலை செய்யும் தொடர்ந்த 7 நாட்களுக்குள் குறைந்தது 24 மணி நேரமாவது இவர்களுக்கு ஓய்வு அளிக்கப்படவேண்டும். இந்த ஓய்வு நேரமானது தொடர்ந்ததாக இருக்க வேண்டியதுடன் இரவு 10 மணிக்கு மேல் காலை 6 மணி வரை உள்ள காலமும் இந்த ஓய்வு நேரத்தில் அடங்கியதாக இருக்கவேண்டும். (வாரம் என்பது சனிக்கிழமை நடு இரவில் ஆரம்பமாகும் 7 நாட்களைக் குறிக்கும்.) — செக்ஷன் 6. இந்த செக்ஷனில் கண்ட விதிகளை மீறினால் குற்றமாகும். ரூ. 200 வரை அபராத தண்டனை உண்டு.

187743

### லீவு நாட்கள்

வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர்களுக்கு விட வேண்டிய விடுமுறை நாட்கள், காஷ்யுவல்லீவு நாட்கள் முதலியவற்றைப்பற்றி விதிகள் ஏற்படும். இதைத் தவிர, இவர்களுக்கு வேறு இரண்டு வகை லீவு நாட்கள் உண்டு. அதாவது அவரவர் வேலை செய்த நாட்களில் 11-ல் 1 பங்கு நாட்கள் இவர்களுக்கு முழுச் சம்பளத்துடன் லீவு விட வேண்டும். (Earned Leave.) மேலும் இவர்கள் வேலை செய்யும் நாட்களில் 18ல் 1 பங்கு நாட்கள் 'மெடிகல் சர்டிபிகேட்'டின் பேரில் அரைச் சம்பளத்தில் லீவு எடுத்துக்கொள்ள இவர்களுக்கு உரிமை உண்டு. (செக்ஷன் 7)

### சம்பள போர்டு (Wage Board)

வேலையில் அமர்ந்திருக்கும் பத்திரிகை எழுத்தாளர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயம் செய்ய ஒரு சம்பள போர்டு அமைக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. இந்த போர்டில் தலைவர் தவிர பாதி மெம்பர்கள் பத்திரிகை நடத்துபவர்களின் பிரதிநிதிகளாகவும் பாதி மெம்பர்கள் பத்திரிகை எழுத்தாளர்களின் பிரதிநிதிகளாகவும் இருப்பார்கள். எல்லா மெம்பர்களையும் மத்திய சர்க்காரே நியமிப்பார்கள். வாழ்க்கைச் செலவு, இதைப் போலுள்ள மற்ற தொழில்களில் இருக்கும் சம்பள விகிதம், அந்தந்தப் பிரதேசங்களில் பத்திரிகைத் தொழில் நடத்தப்படும் சூழ்நிலை முதலிய விஷயங்களை ஆராய்ந்து இப்போர்டார் சம்பள விகிதங்களை நிர்ணயம் செய்து மத்திய சர்க்காருக்கு சிபார்சு செய்வார்கள். இச் சிபார்சுகள் சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்டு அமுலுக்கு வரும். இந்த விகிதங்களுக்குக் குறையாமல் பத்திரிகை நடத்துபவர்கள் சம்பளம் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கின்றனர். இடைக் காலத்திற்கும் சம்பளவிகிதம் நிர்ணயிக்க மத்திய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. (செக்ஷன் 8-12.)

### பத்திரிகை ஸ்தாபனத்தில் வேலை செய்யும் வேறு வகைச் சிப்பந்திகளுக்கும் சில சட்டங்கள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன.

100 அல்லது அதிகமான தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக்கொண்டிருக்கும் தொழில் ஸ்தாபனங்கள் (Industrial Establishments) சம்பந்தப்பட்ட வரையில் ஒரு சட்டம் இருக்கிறது. 1946-ம் வருடத்திய 20-வது மத்தியச் சட்டம். (The Industrial Establishments (Standing Orders) Act 1946) இச் சட்டப்படி இவ்வித ஸ்தாபனங்களை நடத்துபவர்கள் தங்களுடைய சிப்பந்திகள் எத்தனை வகைப்பட்டவர்கள், அவர்களுடைய வேலை நேரம், லீவு முதலிய விஷயங்கள், ஒழுங்கு நடவடிக்கைகள் முதலியவற்றைப்பற்றி விதிகள் ஏற்படுத்திக்கொண்டு அதன்படி நடக்க வேண்டும். இச் சட்ட ஷரத்துக்கள் குறைந்தது 20 சிப்பந்திகளை வேலைக்கு அமர்த்திக்கொண்டிருக்கும் எல்லா பத்திரிகை ஸ்தாபனங்களுக்கும் இச் சட்டத்தால் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. "சிப்பந்திகள்" (Newspaper Employees) என்பதில் வேலை செய்யும் பத்திரிகையாளர்கள் உள்பட பத்திரிகை சம்பந்தமாக வேறு வேலைகளைச் செய்யும் எல்லாச் சிப்பந்திகளும் சேர்ந்தவர்களே. இவ்விதப் பத்திரிகை ஸ்தாபனங்களுக்கு 1952-ம் வருடத்திய 19-வது மத்தியச் சட்டமாகிய சிப்பந்திகள் பிராவிடெண்டு பண்டுச் சட்டமும் (The Employees' Providlent Funds Act 1952) விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. (செக்ஷன் 14 — 15.)

### வேறு தினுசான ஒப்பந்தம் முதலிய செல்லமாட்டா.

இச் சட்டத்தால் பத்திரிகைச் சிப்பந்திகளுக்கு அளிக்கப்படும் அனுகூலங்களுக்கும் சலுகைகளுக்கும் குறைவாகக் கண்டு இச் சட்டத்திற்கு முன்போ பிறகோ ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்தங்களும், அவார்டு, முதலியவைகளும் செல்லமாட்டா.

### பத்திரிகை முதலாளியிடமிருந்து தொகை வசூல் செய்யும் முறை

இச்சட்டப்படி ஒரு பத்திரிகைச் சிப்பந்திக்குக் கிடைக்கவேண்டிய நஷ்ட ஈடு கிராட்யூடி, சம்பளம் இவைகளை வசூல் செய்ய, சிப்பந்தியானவர் ராஜ்ய சர்க்காருக்கு மனுச் செய்து கொள்ளலாம். ராஜ்ய சர்க்காரோ, அவர்களிடம் இதற்காக அதிகாரம் பெற்ற அதிகாரியோ தொகை பாக்கி இருக்கிறதென்று தீர்மானித்தால் கலெக்டருக்கு ஒரு சர்டிபிகேட் அனுப்புவார்கள். இந்த சர்டிபிகேட்டை வைத்துக்கொண்டு கலெக்டர் இத்தொகையை பத்திரிகை முதலாளியிடமிருந்து ரிவின்யூ கிஸ்தியைப் போலவே வசூல் செய்ய அதிகாரம் உண்டு.

### விதிகள்

இச் சட்டத்தை அமுல் நடத்த மத்திய சர்க்கார் விதிகள் இயற்றலாம். (செக்ஷன் 20.)

### ரத்து

1955-ம் வருடத்திய 1-வது மத்தியச் சட்டம் (The working Journalists — Industrial Disputes - Act 1955) இச் சட்டத்தால் ரத்துச் செய்யப்பட்டது.

# போட்டிப் பரிசுச் சட்டம் (1955)

[The Prize Competitions Act 1955. இது பார்லிமெண்ட்டால் இயற்றப்பட்ட 1955-ம் வருடத்திய 42-வது மத்தியச் சட்டம். இச் சட்டத்திற்கு ஜனதிபதி அவர்களால் 22—10—1955ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மத்திய சர்க்காரால் குறிப்பிடப்பட்ட 1-4-1956 தேதி முதல் இச் சட்டம் அமுலுக்கு வந்து விட்டது.]

## அமுலில் இருக்கும் ராஜ்யங்கள்

போட்டிப் பரிசுகள் சம்பந்தமாகச் சட்டம் செய்ய அந்தந்த ராஜ்யங்களுக்கேதான் அரசியல் அமைப்புச் சட்டப்படி அதிகாரம் இருக்கிறது. இது விஷயமாகச் சட்டம் செய்ய இந்திய பார்லிமெண்டுக்கு அதிகாரம் இல்லை. இருந்தாலும் அரசியல் அமைப்புச் சட்டத்தில் ஆர்டிகிள் 252 என்ற ஷரத்தின்படி இரண்டு அல்லது பல ராஜ்யங்கள் ஒரு குறிப்பிட்ட விஷயமாக மத்திய பார்லிமெண்டே சட்டம் செய்யவேண்டுமென்று அபிப்பிராயப்பட்டு அந்தந்த ராஜ்ய சட்டசபைகளும் அவ்விதம் தீர்மானித்தால் அவ் விஷயமாகச் சட்டம் செய்ய மத்திய பார்லிமெண்டுக்கு அதிகாரம் வந்து விடுகிறது. இவ் விதம் பார்லிமெண்டால் செய்யப்பட்ட சட்டமானது எந்தெந்த ராஜ்யங்கள் மேற்கண்டபடி தீர்மானங்கள் செய்திருக்கின்றனவோ அந்த ராஜ்யங்களில்தான் அமுலில் இருக்கும். இந்த ஷரத்தின்படி பார்லிமெண்டால் இயற்றப்பட்ட இச் சட்டமானது, சென்னை, பம்பாய், ஆந்திரா, ஒரிசா, உத்தர பிரதேசம், ஹைதராபாத், மத்திய பாரத், பாடியாலா, கிழக்கு பஞ்சாப், சௌராஷ்டிரா இந்த ராஜ்யங்களிலும் மத்திய சர்க்காரின் நேரடி நிர்வாகத்திலிருக்கும் டில்லி முதலிய வி – பாக ராஜ்யங்களிலும் அமுலில் இருக்கும். ஆனல் மற்ற ராஜ்யங்களும் இது விஷயமாக இனியும் தீர்மானம் நிறைவேற்றினல் அந்த ராஜ்யங்களிலும் இச் சட்டம் அமுலுக்கு வந்துவிடும்.

## பரிசுப் போட்டி

இச் சட்டத்தில் பரிசுப் போட்டி (Prize Competition) என்பது குறுக்கெழுத்துப் போட்டி, விட்டுப்போன வர்த்தைப்போட்டி, படப்பரிசுப் போட்டி முதலிய போட்டிகளைக் குறிக்கும். அதாவது எழுத்துக்கள், வார்த்தைகள் அல்லது எண்களைக் கொண்டு தொகுத்தோ, கூட்டியமைத்தோ ஒரு புதிருக்கு (Puzzle)க்குச் சரியான விடை அளிப்பவருக்குப் பரிசு கொடுக்கப்படுவதைக் குறிக்கும்.

**மாதம் ஒன்றுக்கு ரூ. 1000க்கு மேல் பரிசு கிடையாது. 2000 விடைகளுக்கு மேலும் வாங்கக் கூடாது. (செக்ஷன் 4.)**

இனி பரிசுப் போட்டி நடத்துபவர்கள் ஒரு மாதத்தில் மொத்தமாக ரூ. 1000க்கு மேல் பரிசுகள் கொடுக்கக் கூடாது. பரிசுகள் ரொக்கமாக இருந்தாலும் சரி வேறு விதமாக இருந்தாலும் சரி, எல்லாப் பரிசுகளும் சேர்ந்து ஒரு மாதத்தில் ரூ. 1000க்கு மேற்படாமல் இருக்க வேண்டும். தவிர, ஒவ்வொரு போட்டியிலும் பரிசுப் போட்டிக்கு 2000 விடைகளுக்கு மேற்பட்டு பெற்றுக் கொள்ளக் கூடாது.

## லைசென்சு வேண்டும்.

மேற்கண்டபடி மாதம் ரூ. 1000-க்கு அதிகப்படாமல் பரிசு கொடுப்பதாகச் சொல்லி பரிசுப்போட்டி நடத்துபவர்களும் இதற்காக லைசென்சு வாங்கிக்கொண்டே நடத்த வேண்டும். லைசென்சு யாரிடம் வாங்கவேண்டும், எப்படி வாங்கவேண்டும், கட்டணம் எவ்வளவு என்பதைப்பற்றி விதிகள் இயற்றப்படும். லைசென்சு அதிகாரிக்கு லைசென்சு கொடுக்கவும் கொடுக்க மறுக்கவும் அதிகாரம் உண்டு. (செக்ஷன் 5-6) போட்டிப் பரிசு நடத்துபவர்கள் சரியான கணக்குகள் வைத்துக்கொண்டு விதிகளின்படி லைசென்சு அதிகாரிக்கு ஸ்டேட்மெண்டு அனுப்பி வரவேண்டும். (செக்ஷன் 7) லைசென்சை ரத்து செய்யவும், லைசென்சு கொடுக்கும் அதிகாரிக்கு அதிகாரம் இருக்கிறது. லைசென்சில் கண்ட நிபந்தனைகள் மீறப்பட்டாலும் சரி பரிசுப்போட்டி நடத்துபவர் கணக்கு அனுப்பத் தவறினலும் சரி மேற்கண்டபடி லைசென்சு செய்யப்படலாம். (செக்ஷன் 8.)

## தண்டனை.

மேற்கண்டபடி ரூ. 1000-க்கு மேற்பட்டு ஒரு மாதத்தில் பரிசு கொடுப்பதாகப் போட்டி நடத்தினலும் சரி; ஒரு போட்டியில் 2000 விடைகளுக்கு மேற்பட்டு பெற்றுக் கொண்டாலும் சரி; லைசென்சு வாங்காமல் பரிசுப் போட்டி நடத்தினலும் சரி குற்றமாகும். மூன்று மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 1000-வரை அபராதம்

அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (செக்ஷன் 9.) கணக்கு வைத்துக் கொள்ளாமலிருப்பது, அதிகாரிக்கு கணக்கு அனுப்பாமலிருப்பது, பொய்க்கணக்கு வைத்துக் கொள்ளுவது, இவையும் குற்றமாகும். ஒரு மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500-வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

### சட்டவிரோதமாக நடத்தப்படும் போட்டிப்பரிசு சம்பந்தமாக ஈடுபடும் மற்றவர்களுக்கும் தண்டனை உண்டு.

இச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக நடத்தப்படும் (அல்லது நடத்த ஏற்பாடு செய்யப்படும்) பரிசுப் போட்டி சம்பந்தமாக ஒருவர் (1) டிக்கட், கூபன் முதலியவற்றை அச்சடித்தாலும் (2) டிக்கட் கூபன் முதலியவற்றை விற்றாலும் விநியோகம் செய்தாலும் அதற்காக விளம்பரம் செய்தாலும், (3) விளம்பரம் அல்லது பரிசு பெற்றவர் ஜாப்தா அல்லது வேறுவகைத் தூண்டுதல்களை அச்சடித்தாலும், விளம்பரம் செய்தாலும், விநியோகம் செய்தாலும் அல்லது இதற்காகக் கைவசம் வைத்திருந்தாலும் (4) இச்சட்டம் அமுலில் இல்லாத இடங்களிலிருந்து அமுலில் இருக்கும் இடங்களில் விற்பனை செய்ய டிக்கட்டுகளையோ கூபன்களையோ, விளம்பரம் முதலியவற்றையோ கொண்டு வந்தாலும் அனுப்பும்படி ஏற்பாடு செய்தாலும் (5) இச் சட்டம் அமுலில் இருக்கும் இடங்களிலிருந்து டிக்கட் அல்லது கூபன் விற்ற பணங்களை அனுப்பினாலும் அனுப்ப முயன்றாலும், (6) சட்டவிரோதமான போட்டிப்பரிசு நடத்த ஒரு இடத்தை உபயோகித்தாலும், தெரிந்து அனுமதித்தாலும், (7) மேற்கண்ட குற்றங்களை வேறு ஒருவரைக்கொண்டு செய்யத் தூண்டினாலும் இவை எல்லாம் குற்றமாகும். மூன்று மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500-வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். (செக்ஷன் 11) மேற்கண்ட சட்டவிரோதமான செய்கைகளை ஒரு கம்பெனியார் நடத்தினால் அக்கம்பெனியும் சரி, கம்பெனியை நடத்துபவர்களும் குற்றம் செய்பவராவார்கள். (செக்ஷன் 12.)

### அதிகாரிகள்

லைசென்சு கொடுக்கும் அதிகாரிக்கு கணக்குகளை ஆஜர் செய்யும்படி உத்தரவிடவும் சோதனைகள் செய்யவும் அதிகாரம் உண்டு. (செக்ஷன் 13.) மேலும், சப் இன்ஸ்பெக்டருக்குக் குறையாத எந்த போலீஸ் அதிகாரிக்கும் சோதனைகள் செய்யவும், சட்ட விரோதமான பரிசுப் போட்டிகளை நடத்துபவர்களை அரெஸ்டு செய்யவும் இது சம்பந்தமாக உபயோகிக்கப்பட்ட சாமான்களைக் கைப்பற்றவும் அதிகாரம் உண்டு. (செக்ஷன் 13-14)

### பத்திரிகைகளும் கைப்பற்றப்படும்.

சட்ட விரோதமாக நடத்தப்படும் பரிசுப் போட்டிகள் அல்லது அது சம்பந்தமான விளம்பரங்கள் பிரசுரமாகி இருக்கும் பத்திரிகைகளைக் கைப்பற்றவும் பறிமுதல் செய்யவும் சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது. (செக்ஷன் 15.)

### அப்பீல்.

லைசென்சு அதிகாரியின் உத்தரவின் பேரில் ராஜ்ய சர்க்காருக்கு அப்பீல் உண்டு.

### விதிகள்.

இச் சட்டத்தை அமுல் நடத்த ராஜ்ய சர்க்கார் விதிகள் இயற்றலாமென்று இச் சட்டத்தின் செக்ஷன் 20-ல் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவ் வதிகாரத்தை அனுசரித்து சென்னை சர்க்காரால் விதிகள் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. இவ் விதிகள் 22-2-1956 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட் ரூல் சப்ளிமெண்ட் பாகம் I விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கின்றன.



# அச்சகச் சட்டத் திருத்தம் (1955)

(Press and Registration of Books Amendment Act 1955. 1867-ம் வருடத்திய 25-வது மத்தியச் சட்டமாகிய அச்சகப் புத்தகப் பதிவுச் சட்டத்தில் பல முக்கிய திருத்தங்கள் செய்யும் 1955-ம் வருடத்திய 55-வது மத்தியச் சட்டம். இது பார்லிமெண்டால் இயற்றப்பட்டு 29-12-1955-ல் ஜனதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்று அதுமுதல் சட்டமாயிற்று. ஆனல் இத்திருத்தச்சட்ட ஷரத்துக்கள் அமுலுக்கு வரும் தேதியைக்குறிப்பிட மத்திய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப்பட் டிருக்கிறது. இத் திருத்தச் சட்டத்தால் பத்திரிகைகள், அச்சகம் சம்பந்தமாக ஏற்பட்ட சில முக்கிய மாறுதல்கள் மட்டில் கீழே விளக்கப்பட்டிருக்கின்றன.)

**அச்சகம் வைக்கப்பட்டிருக்கும் இடம் மாற்றப்பட்டால் புதிய 'டிக்ளரேஷன்' (உறுதி) மொழி வேண்டும்.**

அச்சகம் வைத்திருப்பவர்கள் இச் சட்டத்தின் செக்ஷன் 4-ன்படி மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒரு 'டிக்ளரேஷன்' அல்லது உறுதிமொழி செய்ய வேண்டும். இந்த டிக்ளரேஷனில் அச்சகம் வைக்கப்பட்டிருக்கும் இடம் குறிப்பிடப்பட்டிருக்கும். இந்த ஷரத்துடன் இப்போது ஒரு புதிய ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. அதாவது அச்சகம் வைக்கப்பட்டிருக்கும் இடத்தை மாற்றினல் ஒவ்வொரு தடவை மாற்றும்போதும் அச்சகத்தை வைத்திருப்பவர் ஒரு புதிய 'டிக்ளரேஷன்' செய்ய வேண்டுமென்று ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆனல் முன்பு டிக்ளரேஷன் செய்த அதே மாஜிஸ்ட்ரேட்டின் அதிகார எல்லைக்குள்ளேயே வேறு ஒரு இடத்திற்கு அச்சகமானது 60 நாட்களுக்கு அதிகப்படாத காலத்திற்கு மட்டில் மாற்றப்பட்டால் புதிய 'டிக்ளரேஷன்' வேண்டியதில்லை. முன்பு அச்சகம் வைத்தவரே தொடர்ந்து அச்சகக்காரராகவும் இருந்து, இடம் மாற்றிய 24 மணி நேரத்திற்குள் இது விஷயத்தை மாஜிஸ்ட்ரேட்டுக்கு அறிவித்தும் விட்டால் தான் புதிய டிக்ளரேஷன் வேண்டியதில்லை.

**பத்திரிகைக்காரர்கள் செய்ய வேண்டிய டிக்ளரேஷன்**

பத்திரிகைகள் சம்பந்தப்பட்ட வரையில் பத்திரிகை அச்சடிப்பவரும் சரி; பத்திரிகை பிரசுரம் செய்பவரும் சரி (இரண்டும் ஒருவராகவே இருந்தாலும் சரி) பத்திரிகை அச்சடிக்கும் இடம், பிரசுரம் செய்யும் இடம் இரண்டைப் பற்றியும் ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒரு 'டிக்ளரேஷன்' செய்யவேண்டுமென்று செக்ஷன் 5ல் ஏற்கனவேயே இருக்கிறது. இந்த செக்ஷனில் இப்போது அடியில் கண்ட ஷரத்துக்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அவையாவன:— பத்திரிகை சம்பந்தமான டிக்ளரேஷனில் பத்திரிகையின் பெயர், எந்த பாஷையில் பிரசுரம் செய்யப்படுகிறது, எவ்வளவு நாட்களுக்கொரு முறை பிரசுரம் செய்யப்படும் என்ற விபரங்களும் இப்போது டிக்ளரேஷனில் இருக்க வேண்டும். அச்சடிக்கப்படும் இடமோ அல்லது பிரசுரம் செய்யப்படும் இடமோ மாற்றப்பட்டால் புதிய டிக்ளரேஷன் செய்துகொள்ள வேண்டுமென்று இருந்தாலும் மாற்றப்பட்ட இடமானது அதே மாஜிஸ்ட்ரேட்டின் அதிகார எல்லைக்குள் இருந்து மாற்றலும் 30 நாட்களுக்கு அதிகப்படாத காலத்திற்கே இருந்தால் புதிய டிக்ளரேஷன் செய்யத் தேவையில்லை. ஆனல் அச்சடிப்பவரும் பிரசுரம் செய்பவரும் முன்பு இருந்தவர்களாகவே இருப்பதுடன் இடம் மாற்றியதைப்பற்றி 24 மணி நேரத்திற்குள் மாஜிஸ்ட்ரேட்டுக்குத் தெரிவிக்க வேண்டும்.

**பத்திரிகைகளுக்குச் சில சந்தர்ப்பங்களில் 'டிக்ளரேஷன்' ரத்தாகிவிடும். புதிய டிக்ளரேஷன் வேண்டும்.**

ஒரு வாரப்பத்திரிகையோ அல்லது வாரத்தில் பல நாட்கள் பிரசுரம் செய்யவேண்டிய பத்திரிகையோ 'டிக்ளரேஷன்' தேதியிலிருந்து 6 வாரங்களுக்குள் ஆரம்பிக்கப் படாமலே இருந்தாலும் சரி; மற்ற பத்திரிகைகள் 'டிக்ளரேஷன்' தேதியிலிருந்து 3-மாதங்களுக்குள் ஆரம்பிக்கப்படாமலே இருந்தாலும் சரி 'டிக்ளரேஷன்' ரத்தாகி விடும். மறுபடியும் புதிய 'டிக்ளரேஷன்' இல்லாமல் இப்பத்திரிகைகளை ஆரம்பிக்கக்கூடாது.

**பத்திரிகை இதழ்களின் எண்ணிக்கை குறைந்தாலும் 'டிக்ளரேஷன்' ரத்தாகும்.**

ஒரு தினசரிப் பத்திரிகையோ, வாரம் மும்முறை அல்லது இரு முறைப் பத்திரிகையோ, அல்லது ஒரு வாரப் பத்திரிகையோ, அல்லது இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை பிரசுரம் செய்யவேண்டிய பத்திரிகையோ ஒரு மூன்று மாதங்களுக்குள் 'டிக்ளரேஷன்'படி எத்தனை இதழ்கள் பிரசுரம் செய்யவேண்டுமோ, அதற்குப் பாதிக்கும் குறைவான இதழ்களையே பிரசுரம் செய்தால் 'டிக்ளரேஷன்' ரத்தாகும். புதிய 'டிக்ளரேஷன்' செய்துதான் அப்பத்திரிகையை

மறுபடியும் பிரசுரம் செய்யலாம். மற்றப் பத்திரிகைகள் 12-மாதங்களுக்கு மேற்பட்ட காலத்திற்கு யாதொரு இதழும் பிரசுரம் செய்யாவிட்டால் 'டிக்ளரேஷன்' ரத்தாகும். அவ்விதப் பத்திரிகையை மறுபடியும் பிரசுரம் செய்யப் புதிய 'டிக்ளரேஷன்' வேண்டும். (செக்ஷன் 5 திருத்தம்).

ஒரு பத்திரிகையின் பெயரைவைத்தோ அல்லது அதைப் போன்ற பெயரை வைத்தோ வேறு ஒருவர் புதிய பத்திரிகை ஆரம்பிக்க முடியாது.

புதிதாக ஆரம்பிக்கப்படும் பத்திரிகையின் பெயரானது ஏற்கனவே அதே பெயரில்— அதே பாஷையிலோ அல்லது அதே ராஜ்யத்திலோ பிரசுரம் செய்யப்படும் ஒரு பத்திரிகையின் பெயராகவோ, அல்லது அப்பெயரைப் போலவோ இருந்தால் புதிய பத்திரிகையின் டிக்ளரேஷனை மாஜிஸ்ட்ரேட் ஏற்றுக்கொள்ள மாட்டார். மாஜிஸ்ட்ரேட்டானவர் பெயர் விஷயமான விவரங்களை 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' என்ற அதிகாரியிடமிருந்தோ அல்லது வேறு விதமாகவோ தெரிந்துகொள்ளலாம். மாஜிஸ்ட்ரேட் ஏற்றுக் கொண்ட டிக்ளரேஷன்களுக்கு நகலை அவர் 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' என்ற அதிகாரிக்கு அனுப்பவேண்டும் என்ற ஷரத்துக்களும் செக்ஷன் 6-ல் இப்போது சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கின்றன. மேலும் 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' என்ற அதிகாரியானவர் டிக்ளரேஷன் செய்யப்பட்ட ஒவ்வொரு பத்திரிகை பிரசுரிப்பவருக்கும் ஒரு 'சர்டிபிகேட்' (Certificate of Registration) அனுப்புவார். (செக்ஷன் 19c.)

பத்திரிகைகளை அச்சடிப்பவரோ அல்லது பிரசுரம் செய்பவரோ நின்றுவிட்டாலும் அவர்கள் மறுபடியும் டிக்ளரேஷன் செய்ய வேண்டும்

பத்திரிகை சம்பந்தமாக டிக்ளரேஷன் செய்தவர் அச்சடிக்காமலோ பிரசுரம் செய்யாமலோ நின்று விட்டால் மறுபடியும் அவர் மாஜிஸ்ட்ரேட்டிடம் போய் "நான் இனி.... பத்திரிகையை அச்சடிக்கவில்லை — அல்லது பிரசுரம் செய்யவில்லை" என்று ஒரு டிக்ளரேஷன் செய்துவர வேண்டும். அப்படிச் செய்யாமலிருப்பது குற்றமாகும். ரூ. 200 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

பத்திரிகை பிரசுரம் செய்பவர் ஒவ்வொரு பிரசுரத்திற்கும் ஒரு 'காபி' 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' என்ற அதிகாரிக்கு அனுப்ப வேண்டும்.

இச் சட்ட விதிகளுக்குட்பட்டு, பத்திரிகை பிரசுரம் செய்பவர், பத்திரிகையின் ஒவ்வொரு இதழும் பிரசுரமான உடன் ஒரு பிரதியை 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' என்ற அதிகாரிக்கு, அவருக்கு யாதொரு செலவும் வைக்காமல், அனுப்பவேண்டும். இப்படிச்செய்யத் தவறுவது குற்றமாகும். ஒவ்வொரு தவறுதலுக்கும் ரூ. 50 வரை அபராதம் விதிக்கப்படலாம். (புதிய செக்ஷன் 11B — 16B).

"பிரஸ் ரிஜிஸ்டிரார்"

இச் சட்டத்தில் பாகம் V A என்ற ஒரு புதிய அத்தியாயம் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் கண்ட ஷரத்துக்களாவன:—

இந்தியாவில் பிரசுரமாகும் பத்திரிகைகளுக்கு மத்திய சர்க்கார் ரிஜிஸ்ட்ரார் என்ற ஒரு அதிகாரியை நியமிப்பார்கள். இந்த அதிகாரிக்கு 'பிரஸ் ரிஜிஸ்ட்ரார்' (Press Registrar) எனப் பெயர். இந்த அதிகாரியிடம் பத்திரிகை ரிஜிஸ்டர் என்ற ஒரு ரிஜிஸ்டர் இருக்கும். இதில் இந்தியாவில் பிரசுரமாகும் ஒவ்வொரு பத்திரிகைக்கும் அடியில் கண்ட விபரங்கள் இருக்கும். அவையாவன:— பத்திரிகையின் பெயர், பாஷை, எவ்வளவு காலத்திற்கு ஒரு முறை பிரசுரம், ஆசிரியர், அச்சடிப்பவர், பிரசுரம் செய்பவர் இவர்களின் பெயர், அச்சடிக்கும் இடம், பிரசுரம் செய்யப்படும் இடம், பத்திரிகையில் ஒரு வாரத்தில் சராசரிப் பக்கங்கள் எவ்வளவு, வருடத்தில் எத்தனை நாட்கள் பிரசுரம் ஆகின்றது, சராசரி எவ்வளவு பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன, பொதுமக்களுக்கு விற்கப்படும் பிரதிகள் எவ்வளவு, பொதுமக்களுக்கு இனாமாகக் கொடுக்கப்படும் பிரதிகளின் எண்ணிக்கை, சில்லரையில் ஒரு பிரதியின் விலை, பத்திரிகையின் சொந்தக்காரர் பெயர்' இன்னும் மற்ற விபரங்களும் இருக்கும். இவ் விஷயங்களைப்பற்றி ஒவ்வொரு பத்திரிகையும் வருடாவருடம் பிரஸ் ரிஜிஸ்ட்ராருக்கு ஒரு ஸ்டேட்மெண்ட்டு அனுப்பவேண்டியது பிரசுரம் செய்பவரின் கடமையாகும். மேலும் இவ்விஷயங்களைப் பத்திரிகை ரிஜிஸ்ட்ரார் குறிப்பிடும் விதம் அந்தந்தப் பத்திரிகையிலேயே பிரசுரம் செய்யவும் வேண்டும். மேலும் இவ்வதிகாரி அவ்வப்பொழுது கேட்கும் விபரங்களும் அனுப்பப்படவேண்டும். பத்திரிகைக் காரியாலயங்களில் போய் தகவல்களைத் தெரிந்துவர பிரஸ் ரிஜிஸ்ட்ராருக்கும் அவரிடம் அதிகாரம் பெற்ற அதிகாரிகளுக்கும் உரிமை உண்டு. பிரஸ் ரிஜிஸ்டரிலிருந்து கட்டணம் கட்டி நகல் வாங்கிக்கொள்ள யாவருக்கும் உரிமை உண்டு. இவ்வதிகாரிக்குத் தகவல்கள் கொடுக்காமலிருப்பதும் பொய் தகவல்கள் கொடுப்பதும் குற்றமாகும். ரூ. 500 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

விதிகள்.

இச் சட்டத்தை அனுசரித்து மத்திய சர்க்காராலும் விதிகள் இயற்றப்படும்.



# வழக்கும் தீர்ப்பும்

*[இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும்.]*

**இரண்டு மனைவிகளும் இறந்த பிறகு, இந்து ஒருவர் சுவீகாரம் செய்துகொண்டார். இறந்த இரண்டாவது மனைவியே சுவீகார மகனுடைய தாய் என்றும் குறிப்பிட்டார். இறந்த இரண்டாவது மனைவியின் சொத்துக்களில் சுவீகார மகனுக்கு வார்சு பாத்தியம் ஏற்படுமா? சென்னை ஹைகோர்ட் 'புல்' பெஞ்சுத் தீர்ப்பு. 1933ல் ஏற்பட்ட தீர்ப்பு சரி அல்ல என ஐந்து உயர் நீதிபதிகளின் அபிப்பிராயம்.**

[ஆதாரம்:—*69* லா வீக்லி—*149*.]

உமயாள் ஆச்சி என்பவருக்கு காந்திமதி, சிவகாமி என்று இரண்டு பெண் மக்கள். உமயாள் ஆச்சி 1928ல் இறந்தாள். அவளுக்கு இருந்த ரொக்கத்தை அவளுடைய பெண் மக்கள் இருவரும் பிரித்து எடுத்துக் கொண்டனர். மூத்த மகள் காந்திமதி 1935-ல் இறந்தாள். காந்திமதி இறக்கும்போது அவளுக்குச் சொந்தப் பணம் இருந்தது. காந்திமதியின் பணத்திற்குத் தான் தான் வார்சு என்று காந்திமதியின் சகோதரி சிவகாமியானவள் கோர்ட்டில் வார்சு சர்ட்டிபிகேட்டுக்கு மனுக் கொடுத்து 1944ல் வார்சு சர்டிபிகேட்டும் வாங்கிக்கொண்டார்.

காந்திமதி இறந்த பிறகு, காந்திமதியின் கணவர் சொக்கலிங்கம் செட்டியார் ஒரு சுவீகாரம் செய்து கொண்டார். சொக்கலிங்கம் செட்டியாருக்கு காந்திமதி இரண்டாவது மனைவி. அவருடைய முதல் மனைவி விசாலாட்சி என்பவள் இறந்த பிறகு காந்திமதி அவருடைய இரண்டாவது மனைவியாக மணம் செய்துகொள்ளப் பட்டவள்.

இரண்டு மனைவிகளும் இறந்தபிறகு சுவீகாரம் செய்துகொள்ளும் சொக்கலிங்கம் தம்முடைய இரண்டாவது மனைவியாகிய இறந்த காந்திமதிதான் சுவீகார மகனுடைய தாயார் என்று குறிப்பிட்டுச் சுவீகாரம் செய்து கொண்டார். சுவீகார மகனின் பெயர் சோமசுந்திரம் என்கிற அழகப்ப செட்டியார். இறந்த காந்திமதிக்குத் தாம் சுவீகார மகன் என்றும், காந்திமதியின் சொத்துக்களுக்குத் தாம் தான் வார்சு என்றும் அச்சொத்துக்களைப் பொருத்து வார்சு சர்ட்டிபிகேட் வாங்கிய காந்திமதியின் சகோதரி சிவாமிக்குத் தம்முடைய தாயார் சொத்தில் பாத்தியம் இல்லை என்றும் கண்டு இச் சுவீகார மகன் கோர்ட்டில் தாவா செய்தார்.

இவ் வழக்கில் ஏற்பட்ட சட்டப்பிரச்னை இதுதான். ஒரு இந்துவும் அவருடைய மனைவியும் சேர்ந்து ஒரு ஆண் மகனைச் சுவீகாரம் எடுத்துக்கொண்டால் அச் சுவீகார மகனுக்கு அவர்களே தாய் தகப்பன் ஆவார்கள். அவ்விருவருடைய சொத்து சுதந்தரங்களில் சொந்த மகனுக்கு எவ்வித பாத்தியங்களும் உரிமைகளும் உண்டோ, அவை எல்லாம் சுவீகார மகனுக்கும் உண்டு. இதுதான் சட்டம். இதில் ஒன்றும் சந்தேகம் இல்லை.

ஆனல் மனைவி இறந்த பிறகு, ஒருவர் சுவீகாரம் செய்துகொண்டால், சுவீகார மகனுடைய தாய் யார்? சுவீகாரம் எடுத்துக் கொள்ளுபவருடைய இறந்த மனைவிதான், சுவீகார மகனுடைய தாய் என்று ஆகுமா? அவளுடைய சொத்துக்கள் அவள் இறந்த பிறகு தோன்றிய சுவீகார மகனுக்குப் போகுமா? சுவீகார மகன் தோன்றுவதற்கு முன்பே, அச்சொத்துக்களுக்கு வேறு ஒருவர் வார்சாக இருந்து அவற்றை அடைந்திருந்தால், சுவீகாரம் ஏற்பட்டவுடன் அச் சொத்துக்கள் எல்லாம் சுவீகார மகனுக்கே திரும்

புமா? என்ற சிக்கலான ஒரு பிரச்னை இவ் வழக்கில் ஏற்பட்டது.

இவ் வழக்கானது சப் கோர்ட்டு, ஜில்லா கோர்ட்டு இரண்டையும் தாண்டி ஹைகோர்ட்டுக்குப் போகும்போது, இவ் வழக்கில் ஏற்பட்ட சட்டப் பிரச்னையை சென்னை ஹைகோர்ட்டின் ஐந்து உயர் நீதிபதிகள் சேர்ந்து 'புல்பெஞ்'சாக அமைந்து தீர்ப்பளித்தனர். விதவை ஒருவள் சுவீகாரம் செய்துகொண்டால், அவளுடைய கணவன் இறந்த தேதி முதலே, சுவீகார மகன் இருப்பதாக சட்டத்தில் ஒரு பாவனை ஏற்படும். ஆனால் மனைவி இறந்தபிறகு கணவன் செய்துகொள்ளும் சுவீகாரமானது சுவீகாரம் எடுத்துக்கொள்ளப்படும் தேதி முதல்தான் அமுலுக்கு வரும். சுவீகாரம் என்பது கணவனுக்கே. விதவை எடுத்துக்கொள்ளும் சுவீகாரமும் அவளுடைய கணவனுக்கு ஒரு மகன் வேண்டுமென்றே எடுத்துக் கொள்ளப் படுவதாகும். ஆனால் மனைவி இறந்த பிறகு கணவனே உயிருடன் இருந்து நேரில் சுவீகாரம் எடுத்துக்கொண்டால், சுவீகாரம் செய்துகொள்ளப்பட்டதேதி முதல்தான் அது அமுலுக்கு வருமே ஒழிய, சுவீகாரம் செய்து கொள்ளுபவரின் மனைவி இறந்த தேதிமுதல் அது அமுலுக்கு வராது.

கணவன் மனைவி இருவரும் சேர்ந்து ஒரு ஆண்மகனை சுவீகாரம் செய்து கொண்டால், சுவீகார மகனுக்கு அவ்விருவருமே சட்டப்படித் தகப்பனும் தாயுமாவார்கள். சுவீகாரத் தகப்பனுடைய சொத்துக்களுக்கும் சரி, சுவீகாரத் தாயின் சொத்துக்களுக்கும் சரி சுவீகார மகனுக்குச் சொந்த மகனைப்போலவே வார்சு பாத்தியங்கள் உண்டு. விதவை சுவீகாரம் செய்துகொள்ளும்போதும் அப்படியே. அதாவது கணவ்ன் இறந்து எவ்வளவு வருடங்கள் கடந்திருந்த போதிலும், சுவீகார மகனுக்கு சுவீகாரத் தகப்பனுடைய சொத்துக்களிலும் சரி, சுவீகாரத் தாயின் சொத்துக்களிலும் சரி சொந்த மகனைப் போலவே வார்சு பாத்தியங்கள் உண்டு. ஆனால் மனைவி இறந்த பிறகு கணவன்மட்டில் செய்துகொள்ளும் சுவீகார மகனுக்கு சுவீகாரத் தகப்பனுடைய சொத்துக்களில் வார்சுபாத்தியம் ஏற்படுமே ஒழிய முன்பே இறந்த அவருடைய மனைவியின் சொத்துக்களில் சுவீகார மகனுக்கு வார்சு பாத்தியம் ஏற்படாதென்று இவ் வழக்கில் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டுத் தீர்ப்பளித்தனர்.

சொக்கலிங்கத்தின் மனைவி காந்திமதி இறந்துபோய் அவளுடைய சொத்துக்களை அவளுடைய சகோதரி சிவகாமி அடைந்த பிறகு, சொக்கலிங்கம் ஒரு சுவீகாரம் செய்து கொண்டார். சுவீகாரம் செய்து கொள்ளும் போதே காந்திமதியே சுவீகார மகனுடைய தாய் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அப்படி இருந்தும் நடுவில் வேறு வார்சுக்குப் போய்விட்ட காந்திமதியின் சொத்துக்களைத் திருப்பி அடைய சுவீகார மகனுக்கு உரிமை இல்லை என்பதே இவ்வழக்கில் ஏற்பட்ட தீர்ப்பு.

ஏற்கனவே 1933-ம் வருடத்தில் சென்னை ஹைகோர்ட்டில் சௌந்திரபாண்டியன் அய்யங்கார் என்பவருக்கும் பெரிய வீருத்தேவன் என்பவருக்கும் நடந்த ஒரு வழக்கில் (56 மதராஸ் 759=38 லா வீக்லி 45) இரண்டு உயர் நீதிபதிகள் வேறு விதமாகத் தீர்ப்பளித்திருந்தனர்.

அவ் வழக்கில் :—பாண்டி அய்யங்கார் என்பவர் 1890-ல் இறந்தார். அவருக்கு ஆண் மகன் இல்லை. பிச்சையம்மாள் என்ற ஒரு மனைவியும் கோதைஅம்மாள் என்ற ஒரு பெண் மகளும் இருந்தனர். அப் பெண் மகளின் கணவன் துரைசாமி அய்யங்கார். கோதை அம்மாள் 1900-ல் இறந்தாள். பிறகு 1910-ல் அவளுடைய கணவன் துரைசாமி அய்யங்கார், ஒரு சுவீகாரம் செய்துகொண்டார். கோதை அம்மாளின் தாயார் பிச்சை அம்மாள் 1923-ல் இறந்தாள். பிச்சை அம்மாளின் கணவன் பாண்டி அய்யங்காரின் சொத்துக்களுக்கு வார்சு யார்? அவருக்கு மகன் இல்லை. ஒரே மகள் கோதை அம்மாள் இறந்துவிட்டாள். மனைவியும் இறந்துவிட்டாள். அனந்தர வார்சுகள் தங்களுக்குத்தான் சொத்து என்று பாத்தியம் கொண்டாடினர். மகள் கோதை அம்மாள் இறந்த பிறகு அவளுடைய கணவன் எடுத்துக்கொண்ட சுவீகார மகனானவர் "நான்தான் சுவீகாரத்தால், துரைசாமி அய்யங்காரின் பெண் வயிற்றுப் பேரன். நானே வார்சு" என்றார். சுவீகார மகனுக்குத்தான் வார்சு பாத்தியம் என்று இவ் வழக்கில் உயர் நீதிபதிகள் தீர்ப் பளித்தனர். ஒரே மனைவியையுடைய இந்து ஒருவர் அம் மனைவி இறந்த பிறகு சுவீகாரம் செய்துகொண்டால், சுவீகார மகன் என்பவர் இறந்த மனைவிக்கும் மகனாவார் என்றும் அந்த ஹோதாவில் சுவீகாரத் தாயாருடைய வழியில் வார்சு பாத்தியங்கள் ஏற்படுமென்றும் அப்போது உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

சுவீகாரத்தைப் பற்றிய விதிகள் அடங்கிய "தத்தக மீமாம்ஸம்" என்ற நூலில், சுவீகார மகனுடைய தாய் யார் என்பதை ஆராய்ச்சி செய்யும்போது "பிரதிகிருஹீத்ரீ யா மாதா" என்று வர்ணிக்கப்படுகிறது. இந்த சம்ஸ்கிருத வார்த்தைகளுக்கு "சுவீகாரத் தாய்" என்றுதான் அர்த்தமா — அல்லது "கணவன் சுவீகாரம் எடுத்துக் கொள்ளும்போது கணவ

தொடர்ச்சி 22-ம் பக்கம் பார்க்கவும்.

# கேள்வியும் பதிலும்



[இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித் தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர, ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது. கேள்விகள் அனுப்பக் கட்டணம் எதுவும் கிடையாது. கேள்விகளைப் புரியும்படி மாற்றி அமைத்துக் கொள்ளவும் திருத்திக் கொள்ளவும் ஒவ்வொரு இதழுக்காகவும் சில கேள்விகளை மட்டில் பொறுக்கி எடுத்துக் கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமை உண்டு. கேள்வி கேட்பவர்களுக்கு இதை ஆட்சேபிக்கவோ, காரணம் கேட்கவோ உரிமை இல்லை. ஏற்றுக்கொள்ளப்படாத கேள்விகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல.]

## இந்துவின் மூத்த தாரத்தின் மகன் இறந்தால் — இளைய தாரத்தின் மகன்களுக்கு வார்சுரிமை உண்டா?

10. கேள்வி: (c 561 — நல்லசிவன்) ஒரு இந்துவுக்கு முதல்தாரத்தின் மூலம் நான்கு ஆண்மக்கள். தகப்பனும் நான்கு மகன்களும் குடும்பச் சொத்தைப் பாகம் செய்துகொண்டு விட்டனர். பிறகு முதல் தாரம் இறந்தாள். தகப்பன் இரண்டாவது மணம் செய்துகொண்டு இரண்டாவது மனைவிக்கு மூன்று ஆண் மக்கள் உண்டு. பெண்மக்களும் உண்டு. மூத்த தாரத்தின் கடைசி மகன், பாகமானவர், மைனராக இருக்கும்போதே இறந்துவிட்டார். பிறகு தகப்பன் இறந்தார். சொத்துக்களில் இரண்டாவது தார மனைவிக்கோ அவளுடைய மக்களுக்கோ பாகம் உண்டா?

பதில்: மூத்த தாரத்தின் கடைசி மகன் (பாகமானவர்) இறந்தவுடன் அவருடைய சொத்துக்களுக்குத் தகப்பன்தான் வார்சு. அதாவது இச் சொத்துக்கள் தகப்பனுடைய சொத்தாகிவிட்டன. இனி தகப்பனுக்கு வார்சு யார் என்றுதான் பார்க்கவேண்டும். தகப்பன் இறந்தால் தகப்பனுடன் பாகம் பிரியாமல் இருந்துவரும் இரண்டாவது தார மனைவியின் மூன்று ஆண்மக்களும் இரண்டாவது மனைவியுமே இச்சொத்துக்களுக்கு வார்சுகளவார்கள். ஏனென்றால் இந்துச் சட்டத்தில் இப்படி ஒரு விதி இருக்கிறது. அதாவது தகப்பன் இறக்கும்போது அவரிடமிருந்து பாகமாகி பிரிந்து போன மகன்களும், பாகம் செய்துகொள்ளாமல் இருக்கும் மகன்களும் இருந்தால், தகப்பனுடைய சொத்துக்களுக்கு பாகமாகாமல் ஒன்றாக இருக்கும் மகன்கள் மட்டில்தான் வார்சுகள் என்று ஒரு விதி இருக்கிறது. (55 மதராஸ் 577=35 லா வீக்லி 475 என்ற சென்னை ஹைகோர்ட் வழக்கில் இவ்விதம் தீர்ப்பளிக்கப்பட் டிருக்கிறது.) இரண்டாவது மனைவியின் ஆண்மக்கள் தகப்பனுடன் பாகம் செய்துகொள்ளாமல் ஒன்றாக இருந்தால்தான் இவ்விதம். அவர்களும் பாகம் செய்துகொண்டிருந்தால், தகப்பனுடைய மூத்த மனைவியின் மகன்கள், இளைய மனைவியின் மகன்கள் யாவருக்கும், இளைய மனைவிக்கும், இறந்த தகப்பனுடைய சொத்தில் சம உரிமை உண்டு.

## இந்து விதவை சொத்துரிமைச் சட்டம் அமுலுக்கு வந்தது எப்பொழுது

**11.** கேள்வி: (L. 263.) ஒரு இந்து இறந்த பின், அவருடைய சொத்துக்களில் அவருடைய விதவைக்கு ஆயுள் வரை அனுபோக பாத்தியம் உண்டென்று சட்டம் அமலுக்கு வந்தது எந்த வருடத்தில். அதற்கு முன் விதவையானவர்களுக்கு இச் சட்டம் உண்டா?

பதில்: ஆண் மக்கள் இல்லாத இந்து ஒருவர் இறந்தால், அவருடைய விதவைதான் கணவனுடைய சொத்துக்களுக்கு வார்சு; அவள் அச் சொத்துக்களை தன் ஆயுள்வரை அனுபவிக்கலாம் என்பது எப்போதும் உள்ள பழைய இந்துச் சட்டம்தான். ஆண் மக்களை உடைய இந்து ஒருவர் இறந்தால் விதவைக்கு ஜீவனும்ச பாத்தியம் தவிர சொத்துக்களில் வார்சு பாத்தியம் கிடையாதென்று இருந்தது. இப்படி இருக்கும்போது 1937-ல் இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டம் என்று ஒரு அகில இந்திய மத்தியச் சட்டம் இயற்றப்பட்டது. (Hindu Women's Right to Property Act) இச்சட்டம் 14-4-1937-ல் அமுலுக்கு வந்தது. இச் சட்டம் அமுலுக்குவருவதற்கு முன்பு இறந்தவர் விதவைக்குப் பழைய சட்டம்தான். இச் சட்டம் வந்த பிறகு இந்து ஒருவர் இறந்து, அவருக்கு ஆண்மக்கள் இருந்தாலும், அவருடைய விதவைக்கு ஒரு ஆண் மகனைப் போலவே சொத்தில் வார்சு பாத்தியம் உண்டு என்பதுதான் இப்புதுச்சட்ட ஷரத்து. இச் சட்டம் ஒரு மத்திய சட்டமாகையாலும், அந்தந்த ராஜ்யங்களிலுள்ள விவசாய நிலங்களைப் பற்றி சட்டம் செய்ய மத்திய சட்டசபைக்கு அதிகாரமில்லை என்பதாலும் இச்சட்டமானது சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாய நிலங்களை பாதிக்காதென்று உயர் நீதிமன்றத்தில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டபடியால், சென்னை சட்டசபையானது 1947-ல் ஒரு சட்டம் இயற்றிற்று. அதாவது (The Madras Hindu Women's Right to Property — Extention to Agricultural land—Act, 26 of 1947) இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டமானது சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாய நிலங்களுக்கும் பொருந்தும் என்பதுதான் இச் சென்னைச் சட்டம். ஆனால் 26-11-1946-க்கு முன்பு இறந்தவர்களுக்கு இச் சென்னைச் சட்ட ஷரத்து பொருந்தாதென்று அச்சட்டத்திலேயே ஒரு ஷரத்து சேர்க்கப் பட்டிருக்கிறது. இவ்விரண்டு சட்டங்களையும் வைத்துக்கொண்டு பார்த்தால் அடியில் கண்ட நிலைமை ஏற்படும். அதாவது, ஆண் மக்களையும் மனைவியையும் விட்டு ஒரு இந்துஆனவர் :-(1) 14-4-1937க்கு முன்பு இறந்திருந்தால், விதவைக்கு வார்சு பாத்தியம் கிடையாது; ஜீவனும்ச பாத்தியம் மட்டில்தான் உண்டு (2) 14-4-1937 அல்லது அதற்குப்பின் 26-11-1946-க்கு முன்பு இறந்திருந்தால்—வித்வைக்கு சென்னை ராஜ்யத்திலுள்ள விவசாய நிலங்கள் தவிர மற்ற சொத்துக்களில் மட்டில் ஒரு ஆண் மகனைப் போலவே வார்சு பாத்தியம் உண்டு. (3) 26-11-1946 அல்லது அதற்குப்பின் இறந்தால்—விதவைக்கு எல்லா சொத்துக்களிலும் மகனைப்போலவே வார்சு பாத்தியம் உண்டு.

## சொந்த உபயோகத்திற்கு மோட்டார் வைத்துக் கொள்ள பஞ்சாயத்து அனுமதி வேண்டுமா?

12. கேள்வி: (D. E. சுப்பிரமணிய அய்யர்-வள்ளியூர்.) பஞ்சாயத்து எல்லைக்குள் ஒருவர் தன்னுடைய சொந்த வீட்டு உபயோகத்துக்கு ½ H. P. மோட்டார் வைத்துத் தண்ணீர் எடுத்துக் கொண்டால், அதற்குப் பஞ்சாயத்து லைசென்சு எடுக்கவேண்டுமா? அப்படியானால் லைசென்சுக் கட்டணம் எவ்வளவு?

பதில்: பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 92 (b) என்ற ஷரத்தின்படி சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்படாத யந்திர சாதனங்களை எந்த இடத்தில் அமைத்துக் கொள்ளவும் பஞ்சாயத்தின் அனுமதி அல்லது லைசென்சு வேண்டுமென்று இருக்கிறது. ஆனால் ஒருவர் தம்முடைய சொந்த வீட்டு உபயோகத்திற்காக வைத்துக் கொள்ளும் எலெக்ட்ரிக் யந்திரங்களுக்கும், 2 H. P. (2 குதிரை சக்தி)க்கு மேற்படாத மற்ற வகை யந்திர சாதனங்களுக்கும் பஞ்சாயத்தின் அனுமதி வேண்டியதில்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. (27—3—1950 தேதி சென்னை சர்க்கார் கெஜட் — பாகம் I A. ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 39 - அறிக்கை 27 - பார்க்கவும்)

## செலவுத் தொகையைக் கட்டிவிட்டு கட்சியாடும்படி வாதியைக் கேட்க முடியுமா?

13. கேள்வி: (R. வெங்கடராமன்-மதுரை) ஒரு தனவந்தரைக் கேவலப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் அன்னாரது சொத்துக்கள் தனக்குப் பாத்தியமானது என்று அவர் மீது ஒருவர் வழக்குத் தொடங்குகிறார். வியாஜ்யம் தொடங்கியவருக்கு எவ்விதமான சொத்தும் இல்லை. வழக்குத் தள்ளுபடியானால் வாதியானவர் பிரதிவாதிக்கு எவ்வளவு செலவுத்தொகை கொடுக்கும்படி நேரிடுமோ, அத்

தொகையை முன்னதாகவே வாதி கோர்ட்டில் கட்டிவிட்டு வழக்கைத் தொடர்ந்து நடத்தும்படி வாதியைக் கேட்க, பிரதிவாதிக்கு உரிமை உண்டா?

பதில்: சிற்சில சந்தர்ப்பங்களில் வாதியைச் செலவு தொகைக்கு ஜாமீன் கொடுக்கும்படி உத்தரவு செய்ய சிவில் வழக்கு முறைச் சட்டப்படி கோர்ட்டுக்கு அதிகாரம் உண்டு. அதாவது வாதி இந்தியாவுக்கு வெளியே வசித்து அவருக்கு இந்தியாவில் எவ்வித ஸ்தாவர சொத்தும் இல்லாவிட்டாலும் சரி; அல்லது வாதி இந்தியாவை விட்டு வெளியே போய்விடுவார் என்றும் அவர் செலவு தொகை கொடுக்க வேண்டியதாக ஏற்பட்டால் திரும்பி இந்தியாவுக்கு வரமாட்டார் என்றும் கோர்ட்டுக்குத் தோன்றினாலும் சரி; வாதி ஸ்திரீயாக இருந்து இந்தியாவில் அவளுக்குப் போதுமான ஸ்தாவர சொத்துக்கள் இல்லாதிருந்தாலும் சரி; வாதியைக் கொண்டு வழக்காடி அதில் வரும் லாபத்தில் பங்கு எடுத்துக் கொள்ளலாமென்ற நோக்கத்துடன் வேறு நபர்களுடைய உதவியால் நடக்கும் வழக்குக்களிலும் சரி—வாதியானவர் செலவு தொகைக்கு ஜாமீன் கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டார் உத்தரவு செய்யலாம். (சிவில் வழக்கு முறைச் சட்டம் ஆர்டர் 25. விதி. 1.) ஆனால் வாதி ஏழை என்பதும் பிரதிவாதி தனவந்தர் என்பதும் அப்படி உத்தரவிடப் போதுமான காரணங்களாக மாட்டா. மேலும் வாதி ஸ்திரீயாக இருந்தால் அவளிடம் செலவு தொகைக்கு ஜாமீன் கேட்கலாமென்ற மேற்கண்ட வழக்கு முறைச் சட்ட ஷரத்தானது ஆண் பெண் என்ற காரணத்தினால் மக்களிடையே பாரபட்சம் காட்டலாகாதென்ற நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 15 என்ற ஷரத்துக்கு முரணாக இருப்பதால் அது செல்லாதென வாதாட இடம் இருக்கிறது.

## சூதாட்டத்தில் ரூ. 10 அபராதம் விதிக்கப்பட்டவர்—பஞ்சாயத்துத் தலைவர் தேர்தலுக்கு நிற்கலாமா?

14. கேள்வி: (சந்தா நி. 3775) காசு வைத்துச் சூதாடியதில் பிடிபட்டு கிரிமினல் கோர்ட்டில் ரூ. 10 அபராதம் செலுத்தியவர் கிராம பஞ்சாயத்தின் தலைவர் தேர்தலுக்கு நிற்கலாமா? அதனால் தடை உண்டா?

பதில்: இவர் தேர்தலுக்கு நிற்கலாம். தடை இல்லை. கிரிமினல் கோர்ட்டில் 6 மாதத்திற்குமேல் சிறை தண்டனை விதிக்கப்பட்டவர் தான் தண்டனை அனுபவிக்கும் போதும், ~~பிறகு 5 வருடங்கள் வரையி~~லும் தேர்தலுக்கு நிற்க முடியாது. (பஞ்சாயத்துச் சட்டம்—செக்ஷன் 16—21 (6).) அதுவும் ஒரு இழிவு மனப்பான்மையைக் காண்பிக்கும் ஒரு குற்றத்திற்காகத் தண்டிக்கப்பட்டவருக்குத்தான் இத்தடை. தடை இருந்தாலும் அதை நிவர்த்தி செய்ய சர்க்காருக்கு அதிகாரம் இருக்கிறது.

## காபித்தூள் "பாக்கிங்" விஷயமாகப் புதிய விதிகள் என்ன? லேபிள் மூன்று பாஷைகளில் இருக்க வேண்டுமா?

கேள்வி: (முத்தய்யா பிள்ளை—தூத்துக்குடி.) காபித்தூள், தேயிலை பாக்கெட்டுகள் 'பாக்கிங்' விஷயமாகச் சர்க்காரால் இப்போது என்ன விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன? பாக்கெட்டுகளில் இந்தி, ஆங்கிலம், தமிழ் மூன்றிலும் அச்சடிக்கப்பட்டிருக்கவேண்டுமோ?

பதில்: 1954-ம் வருடத்திய உணவுப் பண்டக் கலப்படத் தடைச் சட்டத்தை அனுசரித்து மத்திய சர்க்கார் விதிகள் இயற்றி இருககின்றனர். (9—11—1955 தேதியுள்ள சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் IA ரூல் சப்ளிமெண்ட் பக்கம் 117 முதல் இவ்விதிகள் இருக்கின்றன.) "பாக்கிங்" செய்வது பற்றியும் "லேபிள்" எப்படி இருக்கவேண்டுமென்பது பற்றியும் இப்பாகத்தில் விவரமாக சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட வியாபாரிகள் இவ்விதிகளை நன்றாகத் தெரிந்துகொண்டு தொழில் நடத்துவது அவசியவாகும். சுருக்கமாக:— இச்சட்டத்தால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருந்தாலொழிய "லேபிள்"களில் உள்ளே பாக்கிங் செய்யயப்பட்டிருக்கும் சரக்கின் பெயர், வியாபாரப் பெயர், சரக்கின் விபரம், உற்பத்தி செய்பவர் அல்லது இறக்குமதி செய்பவர், விற்பனையாளர் அல்லது பாக்கிங் செய்தவருடைய வியாபார விலாசம், சரக்கு கெடாமலிருப்பதற்காக அனுமதிக்கப்பட்ட வேறு சரக்குகள் ஏதாவது (Preservative) சேர்க்கப்பட்டிருந்தால் அதன் விபரம், கலர் அல்லது வாசனைக்காக அனுமதிக்கப்பட்ட சரக்குகள் சேர்க்கப்பட்டிருந்தால் அது விபரம், சரக்கின் எடை அல்லது அளவு, தொடர்ந்த நம்பர் இவ்விவரங்கள் அடங்கி இருக்கவேண்டும். சில சரக்குகளை 'பாக்கிங்' செய்யும்போது ஒரு உறுதிமொழியும் லேபிளில் அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்று சில விதிகள் இருக்கின்றன. இவ்வுறுதிமொழியானது ஆங்கிலம், தேவநாகர எழுத்தில் இந்தி அந்த ராஜ்யத்தின் முக்கிய பிரதேச பாஷைகளில் குறைந்தது ஒரு பாஷை இம் மூன்று பாஷைகளிலும் கனத்த கருத்த எழுத்துக்களால், அச்சடிக்கப் பட்டிருக்க வேண்டும். உறுதிமொழியைச் சுற்றி கோடுகள் (பார்டர்) அச்சடிக்கப்பட்டிருக்கவேண்டும். 'குழந்தைகளுக்குக்கூடாது' என்று இருந்தால் அவ்

வெழுத்துக்களைச் சுற்றியும் 'பார்டர்' கோடு கள் இருக்கவேண்டும். அச்சு எழுத்துக்கள் குறைந்தது ⅛ அங்குல உயரமாவது இருக்க வேண்டும். (இது அச்சடிக்க முடியாத சின்ன பாக்கெட்டுகளில் மட்டில் சிறிய எழுத்துக்கள் இருக்கலாம்.) லேபிள்களில் பொய்யான விஷயங்கள் கண்டிருக்கக்கூடாது. உள்ளிருக்கும் சரக்கானது "வைத்தியர்களால் சிபார்சு செய்யப்பட்டது"—என்று அர்த்தம் ஏற்படும்படியான வாசகங்கள் லேபிளில் இருக்கக்கூடாது.

சிக்கரி கலந்த காபி பாக்கெட்டுகளில் காபி எவ்வளவு சதவிகிதம் சிக்கரி எவ்வளவு சதவிகிதம் என்ற உறுதிமொழி அச்சடிக்கப்பட்டிருக்க வேண்டும். 'பிரஞ்சு காபி'— என்பது போன்ற ஏமாற்றும் வாசகங்கள் இருக்கக் கூடாது. லேபிள் அடியில் உற்பத்தியாளருடைய வியாபார விலாசமும் அச்சடிக்கப்பட்டிருக்கவேண்டும்.

## ஒருவர் தம்முடைய கையெழுத்தை மாற்றி மாற்றிப் போடுவதால் ஏதாவது இடையூறுகள் நேரிடுமா?

கேள்வி: (பெ. கா. பெரியதம்பி—சந்தா எண் 3028) ஒருவர் கையெழுத்துப் போடும் போது தன் பெயரையும் முன் 'இனிஷியல்' எழுத்துக்களையும் ஒரே தினுசாகப் போடாமல் ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு தினுசாகப் போட்டுப் பல தஸ்தவேஜுகள் இருக்கின்றன. உதாரணமாக, ஒருவர் தம் கையெழுத்தை சில தஸ்தவேஜுகளில் "பெ. கா. பெரிய தம்பி" என்றும் சில தஸ்தவேஜுகளில் "கா. பெரியதம்பி வாணதிரையர்"—என்றும் சில இடங்களில் "கா. பெரியதம்பி" என்றும் போட்டிருந்தால் பின் வார்சுகளுக்கோ, அல்லது தற்சமயம் ஏதாகிலும் வழக்குகள் நடத்துவதாக இருந்தாலும் இது பாதிக்குமா? அப்படிப் பாதித்தால் சட்டப்படித் தீர்த்துக் கொள்ளுவதற்கு வழி என்ன?

பதில்: (கேள்வி கேட்டிருப்பவர் தம்முடைய பெயரையே மாற்றிமாற்றிப் போடுவதாகக் கேள்வியில் உதாரணமாகக் குறிப்பிடப்படுவதால் இக்கேள்விக்குப் பதில் அளிக்கப்படுகிறது.) ஒருவர் தம்முடைய பெயரையும் கையெழுத்தையும் சந்தர்ப்பத்திற்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவாறு மாற்றி மாற்றிப் போடுவது மிக சகஜமானது. உதாரணமாக, அதிகமான சம்பளமும் அந்தஸ்தும் உள்ள சில சர்க்கார் அதிகாரிகள் தினசரி நூற்றுக்கணக்கான கையெழுத்துக்கள் போடவேண்டியவர்கள் தங்களுடைய முழுப் பெயரையும் கையெழுத்தில் போட இயலாது. இவர்களுடைய கையெழுத்தில் இரண்டொரு எழுத்துக்களும் கோடுகளுமேதான் இருக்கும். ஆனால் இவர்கள் ஏதாவது சொந்த விஷயமான முக்கியமான பத்திரங்களில் கையெழுத்திடும்போது நிதானமாகவும் முழுப் பெயரையும் கையெழுத்தில் போடுவார்கள். ஒரே ஆசாமிதான் கையெழுத்துப் போட்டவர் என்பதை ருசுப்பிக்க முடியுமானால், ஒருவர் தம்முடைய கையெழுத்தை கேள்வியில் கண்டது போன்ற சிறிய மாறுதல்களுடன் போடுவதால் யாதொரு இடையூறுகளும் ஏற்படமாட்டா. ஆனால் ஒரே தினுசாகக் கையெழுத்துப் போட்டு வருவது ஒரு நல்ல பழக்கமே. ஒருவர் தம்முடைய பெயரையே மாற்றிக் கொள்ள இஷ்டப்பட்டால் அதற்கும் சட்டப்படி யாதொரு தடையுமில்லை. பெயர் மாற்றலை சிலர் சர்க்கார் கெஜட் மூலமாகவும் பத்திரிகைகள் மூலமாகவும் விளம்பரப்படுத்தியும் வருகிறார்கள். இப்படிச் செய்வது சட்டத்தால் கட்டாயமில்லாவிட்டாலும், இது ஒரு முன் ஜாக்கிரதையான செய்கையாகும்.

---

(வழக்கும் தீர்ப்பும் 18-ம் பக்கத் தொடர்ச்சி)

னுடன்கூட இருந்து சுவீகார மகனை ஏற்றுக் கொள்ளும் தாய்" என்று அர்த்தமா, என்ற பிரச்னை ஏற்பட்டது. 1933-ல் நடந்த வழக்கில் இதற்கு சுவீகாரத் தாய் அதாவது சுவீகாரம் செய்துகொள்ளும் நபருடைய மனைவி —என்றுதான் அர்த்தம் என முடிவு செய்து மனைவி இறந்த பிறகு கணவன் சுவீகாரம் செய்து கொண்டாலும், இறந்த மனைவியே சுவீகார மகனுக்குத் தாயாவாள் எனத் தீர்ப்புச் செய்தனர்.

இப்போது ஐந்து உயர்நீதிபதிகள் சேர்ந்து அளித்த 'புல் பெஞ்சு'த் தீர்ப்பில் 1933-ல் ஏற்பட்ட தீர்ப்பு தவறு என்று நீதிபதிகள் அபிப்பிராயப் பட்டிருக்கின்றனர். தத்தக மீமாம்சம் என்ற நூலில் வரும் மேற்கண்ட சம்ஸ்கிருத வார்த்தைகளுக்கு—"உயிருடன் இருந்து கணவனுடன் சுவீகார மகனை ஏற்றுக் கொள்ளும் தாய்"—என்றுதான் அர்த்தமாகும் என்றும பிரஸ்தாப வழக்கில் காந்திமதி இறந்தபிறகு அவளுடைய கணவன் சுவீகாரம் செய்து கொண்டதால் அச் சுவீகார மகன் காந்திவதியின் மகன் என்று ஏற்படாதென்றும் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVADAMARUDUR AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM FOR THE VAKIL PUBLICATIONS Private LIMITED. Editor V. S. VIJAYARAGAVACHARI, B.A., B.L.

# 1956 - சிவில் கோர்ட்டுகளின் கோடை விடுமுறை நாட்கள்

(குறிப்பு: ஆரம்பத் தேதி, முடிவு தேதி, இரண்டு நாட்களும் விடுமுறைக்குட்பட்டவைகளே.)

## சென்னை ஹைகோர்ட்

7—5—1956 முதல் 29—6—1956 முடிய.

## சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்

7-5-1956 முதல் 28-6-1956 முடிய. ('வெகேஷன் கோர்ட்டு' ஒவ்வொரு புதன் கிழமையும் வியாழக் கிழமையும் உண்டு.)

## செங்கல்பட்டு ஜில்லா

செங்கல்பட்டு ஜில்லா கோர்ட்டுக்கும் செங்கல்பட்டு சப்கோர்ட்டுக்கும் 14-4-1956 முதல் 4-6-1956 முடிய. செங்கல்பட்டு, காஞ்சிபுரம், பூந்தமல்லி, திருவள்ளூர், டி. மு. கோர்ட்டுகளுக்கு 3-5-1956 முதல் 4-6-1956 முடிய.

## வட ஆற்காடு ஜில்லா

வேலூர் ஜில்லா கோர்ட்டுக்கும் சப்கோர்ட்டுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய. வேலூர், ஆரணி, ராணிப்பேட்டை, ஷோலிங்கர், திருப்பத்தூர், திருவண்ணமலை டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

## தென் ஆற்காடு ஜில்லா

ஜில்லா கோர்ட்டுக்கும் சப்கோர்ட்டுக்கும்-23-4-1956 முதல் 14-6-1956 முடிய.

கூடலூர் ஸ்மால்காஸ் கோர்ட்டு, ஷெ அடிஷனல் கோர்ட்டு, கூடலூர், சிதம்பரம் விருத்தாசலம், விழுப்புரம், திண்டிவனம், திருக்கோயிலூர், கள்ளக்குறிச்சி— டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 26-5-1956 முடிய.

## கிழக்குத் தஞ்சாவூர் ஜில்லா

நாகப்பட்டணம் ஜில்லா கோர்ட்டுக்கும், மாயூரம் சப்கோர்ட்டுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய. மாயூரம், நாகப்பட்டிணம், சீர்காழி, திருத்துரைப்பூண்டி, திருவாரூர், டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

## மேற்குத் தஞ்சாவூர் ஜில்லா

ஜில்லா கோர்ட்டுக்கும், தஞ்சாவூர், கும்பகோணம் சப்கோர்ட்டுகளுக்கும் 2-5-1956 முதல் 22-6-1956 முடிய.

கும்பகோணம், மன்னார்குடி, பட்டுககோட்டை, தஞ்சாவூர், திருவையாறு, வலங்கிமான், டி. மு. கோர்ட்டுகளுக்கு 2-5-1956 முதல் 3-6-1956 முடிய.

## திருச்சிராப்பள்ளி ஜில்லா

திருச்சி ஜில்லா கோர்ட்டுக்கும், திருச்சி, புதுக்கோட்டை சப்கோர்ட்டுகளுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய.

திருச்சி, அரியலூர், குழித்தலை, கரூர், துரையூர், புதுக்கோட்டை டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

## மதுரை ஜில்லா

மதுரை ஜில்லா கோர்ட்டுக்கும், மதுரை, திண்டுக்கல் சப்கோர்ட்டுகளுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய.

மதுரை டவுன் ஸ்மால்காஸ் கோர்ட்டுக்கும் திண்டுக்கல், கோடைக்கானல், மதுரை தாலூக்கா, மதுரை டவுன், மேலூர், பழனி, பெரியகுளம், திருமங்கலம் டி. மு. கோர்ட்டுக்களுக்கும் 23-4-56 முதல் 25-5-56 முடிய.

## ராமனாதபுரம் ஜில்லா

ராமனாதபுரம் ஜில்லா கோர்ட்டுக்கும், தேவகோட்டை, ராமனாதபுரம், சிவகெங்கை சப்கோர்ட்டுகளுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய.

தேவகோட்டை, மானாமதுரை, பரமக்குடி, ராமனாதபுரம், சாத்தூர், சிவகெங்கை, ஸ்ரீவில்லிபுத்தூர் டி. மு. கோர்ட்டுகளுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

## திருநெல்வேலி ஜில்லா

திருநெல்வேலி ஜில்லா கோர்ட்டுக்கும், திருநெல்வேலி, தூத்துக்குடி, சப்கோர்ட்டுகளுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய.

அம்பாசமுத்திரம், கோயில்பட்டி, ஸ்ரீவைகுண்டம், தென்காசி, திருநெல்வேலி, தூத்துக்குடி, டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

## கோயமுத்தூர் நீலகிரி ஜில்லாக்கள்

கோயமுத்தூர் ஜில்லா கோர்ட்டுக்கும், கோயமுத்தூர் சப்கோர்ட்டுக்கும், உதகமண்டலம் சப்கோர்ட்டுக்கும் கூடலூர் டி. மு. கோர்ட்டுக்கும் 14-4-1956 முதல் 4-6-1956 முடிய.

கோயமுத்தூர், தாராபுரம், கோபிசெட்டிப்பாளையம், கொள்ளேகாலம், திருப்பூர், உடுமலைப்பேட்டை டி. மு. கோர்ட்டுகளுக்கு 14-4-1956 முதல் 16-5-1956 முடிய.

ஈரோடு டி. மு. கோர்ட்டுக்கு 3-5-1956 முதல் 4-6-1956 முடிய.

## சேலம் ஜில்லா

சேலம் ஜில்லாகோர்ட்டுக்கும், சேலம் சப்கோர்ட்டுக்கும் 23-4-1956 முதல் 13-6-1956 முடிய.

சேலம், சங்கரிதுர்கம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி டி. மு. கோர்ட்டுக்களுக்கு 23-4-1956 முதல் 25-5-1956 முடிய.

Regd. No. M. 5399 "THE VAKIL" Mar.-April 1956


ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57. விலாசம் "கோகுல்"

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்




பிராஞ்சு: (மன்னார்குடி.)

கூந்தலுக்கு வளர்ச்சியும் மூளைக்குக் குளிர்ச்சியும் கொடுப்பதில் நிகரற்ற சந்தனாதித் தைலம், அரைக்கீரை விதைத் தைலம், கோகுல் கூந்தல் தைலம், வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள், பன்னீர், இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

*Sole Agents:*
For Madras
SURAJ AGENCIES,
MADRAS.

*For Coimbatore, Palghat & Nilgiris:*
B. BALAPATTABI CHETTIAR,
249, Vysyal Street,
COIMBATORE.